ஓம்.

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிறறனை
நந்தி மகன் தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே

திருமந்திரம்

பரமாத்ம ஞானம் 360





மூல னுரைசெய்த மூவா யிரந்தமிழ்
ஞால மறியவே நந்தி அருளது
காலை எழுந்து கருத்தறிந் தோதிடின்
ஞானத் தலைவனை நண்ணுவ ரன்றே

தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும்-கோவை
திருவா சகமும் திருமூலர் சொல்லும்
ஒருவா சகமென் றுணர்

திரு. **J. K. K. முனிராஜா** குமாரபாளையம் பெரும்தொழிலதிபர் கல்வி நிலய அமைப்பாளர், சமய ஆன்மீக போஷகர் அவர்களால் எதிர்மேட்டில் அமைக்கப்பட்டுள்ள அன்னார் அன்னை **J. K. K. சம்பூரணி அம்மாள்** அறக்கட்டளை ஆஸ்பத்திரி வளாசத்தில் முன்புறம் ஆலயம் புதியதாய் நிர்மாணிக்கப்பட்டு யுவ வருடம் ஆனி மாதம் 27-ந் தேதி 11-7-95 ல் நடைபெறும் பூரண கும்பாபிஷேக விழாவில், கோவிலூர் மரபு அத்வைத போதகர்கள் நெரூர் ஸ்ரீ கைலாச ஆஸ்ரம ஸ்தாபகர் **ஸ்ரீலஸ்ரீ சதாசிவானந்த சுவாமிகள்,** குமாரபாளையம் ஆனந்தாஸ்ரம ஆசாரிய குரு முதல்வர் தவத்திரு **சோம. கோபால சுவாமி சுவாமிகள்** ஆகியோரை போற்றி வணங்கி, மோக்ஷ இச்சை யுடையோர் சர்வ துக்க நிவர்த்தி பரமானந்தப் பிராப்த்தி அடைய ஆன்மீக அப்பியாசியானயான் பணிவுடன் சமர்ப்பிக்கின்றேன்.

11—7—95 ல் 9-வது ஞானதானமாய்

R. I. P. இராமநாதன்
436, சேலம் மெயின் ரோடு,
குமாரபாளையம்-638183.

திருமந்திரமாலை - பரமாத்ம ஞானம் - பாயிரம்

ஒன்று அவன்தானே[1] இரண்டு அவன் இன்னருள்[2]
நின்றனன் மூன்றினுள்[3] நான்கு உணர்ந்தான் ஐந்து
வென்றனன் ஆறு விரிந்தனன் ஏழு உம்பர்ச் (1)
சென்றனன் தான் இருந்தான் உணர்ந்து எட்டே[4]

போற்றி என்பார்[5] அமரர் புனிதன் அடி
போற்றி என்பார்[6] அசுரர் புனிதன் அடி
போற்றி என்பார்[7] மனிதர் புனிதன் அடி (44)
போற்றி என்[8] அன்புள் பொலிய வைத்தேனே

பரை[9] பசு[10] பாசத்து[11] நாதனை உள்ளி
உரை பசு பாசத்து ஒருங்க வல்லார்க்குத்
திரை பசு பாவச் செழுங்கடல் நீந்திக்
கரை பசு பாசங் கடந்து எய்தலாமே (49)

வேதத்தை விட்ட அறம் இல்லை வேதத்தின்
ஓதத்தகும் அறம் எல்லாம் உளதர்க்க
வாதத்தை விட்டு மதிஞர் வளமுற்ற
வேதத்தை ஓதியே வீடு பெற்றார்களே_(51)

யான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்
வான் பற்றி நின்ற மறைப்பொருள் சொல்லிடின்
ஊன் பற்றி நின்ற உணர்வுறு மந்திரம்
தான் பற்றப் பற்றத் தலைப்படும் தானே (85)

அங்கி மிகாமை வைத்தான் உடல் வைத்தான்
எங்கும் மிகாமை வைத்தான் உலகு ஏழையும்
தங்கி மிகாமை வைத்தான் தமிழ்ச்சாத்திரம் (87)
பொங்கி மிகாமை வைத்தான் பொருள் தானுமே

ஞேயத்தை[12] ஞானத்தை[13] ஞாதுரு வத்தினை[14]
மாயத்தை[15] மாமாயை[16] தன்னில் வரும் பரை[17]
ஆயத்தை[18] அப்பரன்[19] தன்னை யகோசர
வீயத்தை முற்றும் விளக்கி விட்டேனே (90)

பதி[20] பசு[21] பாசம்[22] எனப்பகர் மூன்றிற்
பதியினைப் போல் பசு பாசம் அனாதி
பதியினைச் சென்று அணுகாப் பசு பாசம்
பதி அணுகிற் பசு பாசம் நில்லாவே[23] (115)

1 பரமாத்மா 2 வனப்பு நடப்பு சக்தி-அறக்கருணை மறக்கருணை 3 இச்சை கிரியை ஞானம் – அருவம் உருவம் அருவுருவம் சத்துவம் ரஜஸ்தமஸ் 4 பஞ்சபூதம் பூமி நீர் தீ வாயு ஆகாயமுடன் ஈசுரன் மாயை ஆத்மா-மனம் புத்தி அகங்காரம்-ஜீவன் சூரியன் சந்திரன் - ஆத்ம குணம்-அஸ்டாங்க யோகம்-திசைகள்-சூச்சுக ஆதாரங்கள் 5 இன்பத்திற்காக 6 பொருளுக்காக 7 அறத்திற்காக 8 மோக்ஷத்திற்காக 9 நடப்பாற்றல் 10 கிடப்பு உயிர் 11 முடக்கு மலம் 12 அறியப்படும் பிரமத்தை 13 அறிவாகிய ஞானத்தை 14 உணர்வோனாகிய ஜீவனை 15 ஸ்தூல தோற்றம் தேகம் 16 சூக்குமஉணர்வு தேகம் 17 உணர்த்தும் தூய மாமாயை 18 வனப்பு ஆற்றல் தொகுதி 19 விழுப்பொருள் பிரமம் 20 இறைவன் 21 ஜீவன்-உயிர் 22 பந்தம்-தளை 23 அடங்கும்-ஒடுங்கும்.

திருமந்திரம்-தந்திரம் 1-உபதேசம், யாக்கை செல்வம் உயிர் நிலையாமை

சூரிய காந்தமும்[1] சூழ் பஞ்சும் போலவே
சூரிய காந்தம் சூழ் பஞ்சைச் சுட்டிடா
சூரியன் சந்நிதியில் சுடுமாறு போல்
ஆரியன்[2] தோற்ற முன் அற்ற மலங்களே[3] (117)

முப்பதும் ஆறும் படி[4] முத்தி ஏணியாய்
ஒப்பிலா ஆனந்தத்து உள்ளொளி புக்குச்
செப்ப அரிய பரங்கண்டு தான் தெளிந்து
அப் பரிசாக அமர்ந்து இருந்தாரே (126)

பெருமை சிறுமை அறிந்து எம் பிரான்போல்
அருமை எளிமை அறிந்து அறிவார் யார்
ஒருமை உள் ஆமைபோல் உள் ஐந்து அடக்கி
இருமையும் கேட்டு இருந்தார் புரை[5] அற்றே (133)

சத்தம் முதல்[6] ஐந்தும் தன்வழித் தான் சாரில்[7]
சித்துக்குச்[8] சித்து[9] அன்றிச் சேரும் இடம்வேறு உண்டோ
சுத்த வெளியில் சுடரில்[10] சுடர்[11] சேரும்
அத்தம் இதுகுறித்து ஆண்டுகொள் அப்பிலே[12] (135)

அப்பினில்[13] கூர்மை[14] ஆதித்தன் வெம்மையால்
உப்புஎனப் பேர்பெற்று உருச்செய்த அவ்வுரு
அப்பினில் கூடிஅது[15] ஒன்றுகு மாறுபோல்
செப்பினில் ஜீவன் பரத்துள் அடங்குமே (136)

பண்டம்[16] பெய் கூரை பழகி[17] விழுந்தக்கால்
உண்ட அப்பெண்டிரும் மக்களும் பின்செலார்
கொண்ட விரதமும் ஞானமும் அல்லது
மண்டி[18] அவருடன் வழி நடவாதே (144)

வாழ்வும் மனைவியும் மக்கள் உடன் பிறந்தாரும்
அளவு எது எமக்கு என்பர் ஒண்[19] பொருள்
மேவும் அதனை விரிவு செய்வார்கட்குக்
கூவுந்[20] துணை ஒன்று கூடலு மாமே (174)

ஐவர்க்கு ஒரு செய்[21] விளைந்து கிடந்தது
ஐவரும் அச் செய்யைக் காத்து வருவர்கள்
ஐவர்க்கு நாயகன்[22] ஓலை வருதலால்
ஐவரும் அச் செய்யைக் காவல் விட்டாரே (188)

1 காந்தக்கல்லும் 2 ஞானகுரு 3 ஆணவம் கன்மம் மாயை மூன்றும் 4 பல படிகளுடைய வழிப்பேறாகிய 5 குற்றம் 6 தன்மாத்திரை 7 மாயையில் ஒடுங்கில் 8 உயிர் அறிவுக்கு 9 பேரறிவு 10 பேரறிவொளியில் 11 உயிர் அறிவு 12 அருள் சக்தியிலே 13 தண்ணீரில் 14 உப்புத்தன்மை 15 உப்புத்தன்மை 16 இவ்வுடல் 17 வாழ்ந்து முதிர்ந்து 18 சேர்ந்து 19 நன்மைக்காகும் சிறந்த 20 கூப்பிடும் கடவுள் 21 உடலாகிய விளைநிலம் 22 இயமன்.

திருமந்திரம் தந்திரம் 1- கொல்லாமை நல்குரவு
அந்தணரொழுக்கம், தானச்சிறப்பு

அவ்வியம்[23] பேசி அறம்கெட நில்லன்மின்
வெவ்வியன்[24] ஆகிப் பிறர்பொருள் வவ்வன்மின்
செவ்வியன்[25] ஆகிச் சிறந்து உண்ணும் போது ஒரு
தவ்விக்[26] கொடுமின் தலைப்பட்ட[27] போதே (196)

பற்றாய[28] நற்குரு பூசைக்கும் பன்மலர்
மற்றோர் அணுக்களைக்[29] கொல்லாமை ஒண்மலர்[30]
நற்றார்[31] நடுக்கற்ற தீபமும் சித்தமும்
உற்றாரும் ஆவி[32] அமர்ந்த இடம் உச்சியே[33] (197)

கொலையே களவு கள் காமம் பொய்கூறல்
மலைவான[34] பாதகமாம் அவை நீக்கித் (200)
தலையாம் பரனடி சார்ந்து இன்பம் சார்ந்தோர்க்கு
இலையாம்இவை[35] ஞானானந்தத்து இருத்தலே

ஆத்த[36] மனையாள் அகத்தில் இருக்கவே
காத்த[37] மனையாளைக் காமுறும் காளையர்
காய்ச்ச[38] பலாவின் கனி உண்ண மாட்டாமல்
ஈச்சம் பழத்துக்கு இடருற்ற[39] வாறே (201)

பொய்க்[40] குழி தூர்ப்பான் புலரி புலருதென்று
அக்குழி தூர்க்கும் அரும் பண்டம் தேடுவீர்
எக்குழி[41] தூர்த்தும் இறைவனை ஏத்துமின்
அக்குழி தூரும் அழுக்கற்ற போதே (210)

வேதாந்தம் கேட்க விரும்பிய வேதியர்
வேதாந்தம் கேட்டும் தம் வேட்கை[42] ஒழிந்திலர்
வேதாந்த மாவது வேட்கை ஒழிந்த இடம்
வேதாந்தம் கேட்டவர் வேட்கை விட்டாரே (229)

திரு[43] நெறி யாகிய சித்த[44] அசித்து[45] இன்றிக்
குரு நெறி யாலே குரு பதம் சேர்ந்து
கரும நியமாதி மைவிட்டுக் காணுந்
துரிய சமாதியாம் தூய் மறையோர்க்கே (232)

ஆர்க்கும் இடுமின் அவர்இவர் என்னன்மின்
பார்த்து இருந்து உண்மின் பழம்[46] பொருள் போற்றன்மின்
வேட்கை உடையீர் விரைந்தொல்லை[47] உண்ணன்மின்
காக்கை கரைந்து உண்ணும் காலம் அறிமினே (250)

23 வஞ்சனை பொய் பொறாமை 24 கொடுமையுடைய பேராசைக்காரன் 25 செப்பமுடைய நடுநிலையோன் 26 அகப்பை அள்ளிக் 27 நேர்படும் 28 பற்றுதற்குரிய 29 உயிர் 30 கொல்லாமை, ஐம்பொறியடக்கல் பொறுமை, இரக்கம், அறிவு மெய், தவம், அன்பு 31 நல்லமாலை 32 உயிர் 33 சென்னியின் உச்சி சிறப்பிடம் 34 மாறா மயக்கம் தரும் பெரும 35 தீவாய் நரகிடை வீழ் துன்பம் 36 வாழ்க்கைத் துணையாய் கைக்கொண்டு புணர்ந்த 37 புறக்காவல் உள்ள மாற்றானின் 38 கனிந்த 39 கிட்டாதுஏய்க்கும் 40 வயிற்றுக் 41 பசி நோய், வறுமை, பிறவிக்குழி 42 கொலை புலை வேள்வி என தனக்கு என செய்து வரும் தொழில்கள் 43 வேதாந்தகுரு சன்மார்க்க 44 சிரேயஸ் பரலோக மார்க்கம் 45 பிரேயஸ் - இகலோக மார்க்கம் 46 நாட்கள் கழிந்த—பழையனவாகக் கழியுமாறு 47 படபடப்பாய் கழி விரைவாய் தனித்து.

திருமந்திரம்-தந்திரம் 1-அறம் அன்பு கேள்வி கல்லாமை நடுவுநிலை

யாவர்க்கும் ஆம் இறைவர்க்கு ஒரு பச்சிலை[1]
யாவர்க்கும் ஆம் பசுவுக்கு ஒரு வாய் உறை[2]
யாவர்க்கும் ஆம் உண்ணும் போது ஒரு கைப்பிடி[3]
யாவர்க்கும் ஆம் பிறர்க்கு இன்னுரை[4] தானே (252)

அன்பு[5] பரம்[6] இரண்டென்பர் அறிவிலார்
அன்பே பரம் ஆவது யாரும் அறிகிலார்
அன்பே பரம் ஆவது யாரும் அறிந்தபின்
அன்பே பரமாய்[7] அமர்ந்து இருந்தாரே (270)

என்பே[8] விறகாய் இறைச்சி அறுத்திட்டுப்
பொன்போல் கனலில் பொரிய வறுப்பினும்
அன்போடு உருகி அகம் குழைவார்க்கு அன்றி
என்போல் மணியினை[9] எய்த ஒண்ணுதே (272)

புணர்ச்சியுள் ஆயிழை மேல் அன்பு போல்
உணர்ச்சியுள் ஆங்கே ஒடுங்க வல்லாருக்கு
உணர்ச்சி[10] இல்லாது குலாவி உலாவி
அனைத்தலும் இன்பம் அது[11] இது[12] ஆமே (283)

விழுப்பமும்[13] கேள்வியும் மெய் நின்ற ஞானத்து
ஒழுக்கமும் சிந்தை உணர்கின்ற போது
வழுக்கி[14] விடாவிடில் வானவர் கோனும்
இழுக்கின்றி எண்ணிலி காலம தாமே (305)

நில்லாது ஜீவன் நிலை அன்று என எண்ணி
வல்லார்[15] அறத்தும்[16] தவத்துஉள்ளும் ஆயினார்
கல்லா மனிதர் கயவர் உலகினில்
பொல்லா[17] வினைத்துயர் போகம் செய்வாரே (314)

நடுவு நின்றான் நல்ல கார்முகில் வண்ணன்
நடுவு நின்றான் நல்ல நான்மறை யோதி
நடுவு நின்றார் சிலர் ஞானிகள் ஆவோர்
நடுவு நின்றார் நல்ல நம்பனும்[18] ஆமே (321)

மயக்கும் சமய மலம் மன்னும் மூடர்
மயக்கும் மது உண்ணும் மாமூடர் தேரார்[19]
மயக்குறும் மாமாயை மாயையின் வீடும்[20]
மயக்கில் தெளியின் மயக்குறும் அன்றே (329)

1 செம்பை பொன் ஆக்கும் திறத்தது 2 புற்கொடுத்தல் களையெடுத்தல் 3 அறத்தின் கூறு 4 வீட்டின்கூறு 5 திருவருளாற்றல் 6 பேரொளி இன்ப ஆனந்தம் 7 உயிர்க்குணம் அன்பாகிய வித்தே விரிந்து விளைந்து பரவியாபகத்துள்ளே அழுத்தி அறிந்து அனுபவமாய் பிரிவின்றி 8 எலும்பே 9 மனமணிலிங்க பரம் இறைவனை 10 உலகப்பற்று–பந்தபாசம் 11 பரமாத்மா 12 ஜீவாத்மா 13 வைராக்கியம் 14 தவறி 15 இம்மை உம்மை வாழ்வுக்கு 16 அம்மை வாழ்வுக்கு 17 இறந்தும் பிறந்தும் இருவினை 18 கடவுள் 19 தெளிவித்தாலும் தெளியார் 20 விலகும்

திருமந்திரமாலை தந்திரம் 1-2 விரட்டம் 8, லிங்க புராணம், படைத்தல், மறைத்தல் அருளன்

சத்தியை வேண்டிச் சமயத்தோர்[1] கள் உண்பர்
சத்தி அழிந்தது தம்மை மறத்தலால்
சத்தி பர ஞானத் தன்னில் தலைப்பட்டுச்
சத்திய ஞான ஆனந்தத்தில் சார்தலே (332)

அப்பணி செஞ்சடை ஆதி புராதனன்
முப்புரம்[2] செற்றனன்[3] என்பர்கள் மூடர்கள்
முப்புரம் ஆவது மும்மல காரியம்
அப்புரம்[4] எய்தமை யார் அறிவாரே (343)

திரிகின்ற[5] முப்புரம் செற்ற[6] பிரானை
அரியன்[7] என்று எண்ணி அயர்வுற வேண்டாம்
புரிவுடை[8] யாளர்க்குப் பொய்யலன் ஈசன்
பரிவோடு நின்று பரிசறி வானே[9] (348)

ஆதியோடு அந்தம் இலாத பராபரம்
போதமதாக[10] புணரும் பராபரை[11]
ஜோதி[12] அதனிற்[13] பரம் தோன்றத் தோன்றும்
தீதுஇல் பரை அதன்பால் திகழ்[14] நாதமே (381)

ஒருவனுமே உலகு ஏழும் படைத்தான்
ஒருவனுமே உலகு ஏழும் அளித்தான்[15]
ஒருவனுமே உலகு ஏழும் துடைத்தான்
ஒருவனுமே உலகோடு உயிர் தானே (404)

ஆதித்தன் சந்திரன் அங்கி எண்[16] பாலர்கள்
போதித்த வான் ஒலி பொங்கியநீர் புவி
வாதித்த சத்தாதி[17] வாக்கு[18] மனாதிகள்[19]
ஓதுற்ற மாயையின்[20] விந்துவின் உற்றதே[21] (410)

மண் ஒன்றுதான் பல நற்கலம்[22] ஆயிடும்
உண்ணின்ற யோனிகள்[23] எல்லாம் ஒருவனே
கண் ஒன்றுதான் பலகாணும் தனைக்[24] காணா
அண்ணலும் இவ்வண்ணம் ஆகி நின்றானே (440)

ஆரும் அறியாத அண்டத்து திருவுருப்
பார்[25] முதலாகப் பயிலும் கடத்திலே
நீரினில் பால் போல் நிற்கின்ற[26] நேர்மையைச்
சோராமல்[27] காணும்[28] சுகம்[29] அறிந்தேனே (450)

1 சித்தர்-வாமமதத்தார் 2 பொன் வெள்ளி இரும்பு-ஆனவம் கன்மம் மாயை 3 அழித்தனன் 4 அன்பு அறிவு ஆற்றலோடு கூடி உயிர் நடுவுள்ளிருந்து 5 ஒரு நிலையில் நில்லாத 6 அழித்த 7 சிந்தனைக்கு எட்டாதவன் 8 விருப்பம்-மெய்யன்புடை 9 அருள் செய்வானே 10 பேரறிவு வனப்பாற்றலாக 11 பராசக்தி வனப்பாற்றல் 12 வனப்பாற்றல் 13 துரியாதீதத்தில் 14 நிலைக்களமாக முதற்கண் தோன்றும் 15 காத்தருளினன் 16 ஞாயிறு நமன் வருணன் சோமன தீ நிருதி வாயு சநந்தன் 17 தந்மாத்திரைகள் 18 கர்மேந்திரியம் 19 அந்தக்கரணமும் ஞானேந்திரியமும் 20 தூய மாயையின் கீழாய் மூலப் பகுதியின் 21 தோன்றியதே 22 பானை சட்டி குடம் 23 ஏழுவகை தோற்றம் நால்வகை பிறப்பு 24 ஆத்மாவைக் 25 பூமி 26 நீரை பால் எனவாக்கிய 27 மறந்துவிடாமல் 28 நுகரும் 29 பேரின்பம்.

திருமந்திரமாலே 2ல் தீர்த்தம் ஏந் தந்திரம் இயமம் நியமம் ஆதனம் பிராணாயாமம் பிரத்தியாகாரம்.

உள்ளத்தின் உள்ளே உள பல[1] தீர்த்தங்கள்
மெள்ளக் குடைந்து நின்று ஆடார் வினைகெடப்
பள்ளமும் மேடும் பரந்து திரிவரே
கள்ள மனம் உடையக் கல்வி இல்லாரே (509)

கொல்லான் பொய்கூறான் களவிலான் எண்[2]குணன்
நல்லான் அடக்கம் உடையான் நடுச்செய்ய
வல்லான் பகுந்து உண்பான் மாசிலான் கள்காமம்
இல்லான் இயமத்து இடையில் நின்றானே [554]

தூய்மை அருள் ஊண்சுருக்கம் பொறை[3] செவ்வை[4]
வாய்மை நிலைமை[5] வளர்த்தலே மற்றிவை
காமம் களவு கொலை எனக்[6] காண்பவை
நேமி[7] ஈரைந்து நியமத்தன் ஆமே [556]

தவம் செபம்[8] சந்தோடம்[9] ஆத்திகம்[10] தானம்
பரன்றன் விரதமே சித்தாந்தக் கேள்வி[11]
மகம்[12] பரை பூஜையோன் மதிசொல் ஈர்ஐந்து
நிவம்[13]பல செய்யின் நியமத்தன் ஆமே

பத்திரம் கோமுகம் பங்கயம் கேசரி
சொந்திரம் வீரம் சுகாதனம் ஓர் ஏழும்
உத்தம மாமுது[14] ஆசனம் எட்டு எட்டுப்
பத்தோடு நூறு பல ஆசனமே [563]

புள்ளினும்[15] மிக்க புரவியை[16] மேற்கொண்டால்[17]
கள் உண்ண வேண்டாம் தானே களிதரும்
துள்ளி நடப்பிக்கும் சோம்பு தவிர்ப்பிக்கும்
உள்ளது சொன்னேம் உணர்வுடை யோருக்கே [565]

இட்ட அவ்வீடு[18] இளகாது ரேசித்து[19]
புட்டிப்படத்[20] தச[21] நாடியும் பூரித்துக்
கொட்டிப்[22] பிராணன் அபானனும் கும்பித்து
நட்டம்[23] இருக்க நமன் இல்லை தானே [574]

மூலத் துவாரத்தை முக்காரம்[24] இட்டு இரு
மேலைத்[25] துவாரத்தின் மேல் மனம் வைத்து இரு
வேல் ஒத்த கண்ணை வெளியில்[26] விழித்து இரு
காலத்தை வெல்லும் கருத்து இது தானே [583]

1 அன்பு அருள் மறை ஈறு மொழிகள் 2 எண்ணிப்பார்க்கத்தக்க மதிக்கப்படும் 3 பொருமை 4 செம்மை 5 மானம் என்பவை அகற்றிக் 7 நியமத்தை உடையவன் 8 மந்திரம் கணித்தல் 9 பரம்பொருளை நினைத்து மகிழ்வும் 10 மெய்ப்பொருள் உணர்தல் 11 ஆராய்தல் 12 அகக்கரண பூஜைகள் 13 நன்றாற்றலின் வித்து 14 சுவத்திகம்-தொடைக்கும் முழங்காலுக்கும் நடுவே இரண்டு உள்ளங்கால்களையும் செலுத்தி இறுமாந்திருப்பது 15 வானம்பாடி 16 பிராணாயாமம் 17 அடக்கினில் 18 உடல் 19 வெளிவிட்டு 20 பருக்கும்படி 21 பத்து-செவி2, கண்2, வலப்பால் இடப்பால் நடுநாடி3 உள்நாக்கு1 கருவாய் எருவாய்2, 22 வீணாகக்கழியும் 23 நிலை நிறுத்தல் 24 செவ்வே நிமிர்ந்து அமுத்தி அடைத்து 25 உச்சி 26 உறக்கமின்றி அக நாட்டமாய் பாதிக்கண்மூடியும் பாதிக்கண் திறந்திருந்தும் புறப்பொருள்களைப் பாத்தும் சாட்சியாய் பற்றின்றி.

திருமந்திரமாலை [illegible] தந்திரம் - பிரத்தியாகாரம் தாரணை தியானம் சமாதி

ஒருக்கால் உபாதியை[1] ஒண்ஜோதி[2] தன்னைப்[3]
பிரித்து உணர் வந்த உபாதிப் பிரிவைக்
கரைத்து உணர் வுன்னல் கரைதல் உள் நோக்கல்
பிரத்தியாகாரப்[4] பெருமை அது ஆமே (585)

மேலை[5] நிலத்தினாள் வேதகப்[6] பெண்பிள்ளை
மூல நிலத்தில்[7] எழுகின்ற மூர்த்தியை[8]
ஏல எழுப்பி இவளுடன்[9] சந்திக்கப்
பாலனும் ஆவான் பராநந்தி ஆணையே (590)

அரித்த[10] உடலை ஐம் பூதத்தில் வைத்துப்
பொருத்த[11] ஐபூதஞ் சத்தாதியில்[12] போந்து
தெரிந்த மனாதி[13] சத்தாதியில்[14] செல்லத்
தரித்தது தாரணை தற்பரத் தோடே (597)

வரும்ஆதி ஈரெட்டுள்[15] வந்த[16] தியானம்
பொருவாத புந்தி புலன் போக மேவல்[17]
உருவாய[18] சத்தி பரத்[19]தியானம் உன்னும்[20]
குருவார் பரைத்[21] தியானம் யோகத்தின் கூறே (598)

மணி கடல் யானை வார்குழல்[22] மேகம்
அணிவண்டு தும்பி வளை[23] பேரிகை யாழ்
தணிந்து எழு நாதங்கள் தாம் இவை பத்தும்
பணிந்தவர்க்கு அல்லது பார்க்க[24] ஒண்ணாதே

மூலநாடி[25] முகட்டல குச்சி[26] யுள்
நாலு[27] வாசல் நடுவுள் இருப்பீர்காள்
மேலை[28] வாசல் வெளியுறக் கண்ட பின்
காலன் வார்த்தை கனாவிலும் இல்லையே (622)

கற்பனை அற்றுக் கனல்[29] வழியே சென்று
சிற்பனை[30] எல்லாம் சிருஷ்டித்த பேரொளிப்
பொற்பினை நாடிப் புணர் மதியோடு[31] உற்றுத்
தற்பரம்[32] ஆகத் தகும் தண் சமாதியே (628)

சமாதி செய்வார்க்குத் தகும் பல[33] யோகம்
சமாதிகள் வேண்டாம் இறையுடன் ஏகில்
சமாதி தான் இல்லை தான்[34] அவன்[35] ஆகில்
சமாதியில்[36] எட்டுஎட்டு[37] சித்தியும் எய்துமே (631)

1 மாயையுடன் கூடிய உயிரை 2 பேரொளி பிரமம் 3 ஆருயிரை 4 தொகுத்துக் காண்டல் 5 அருள்வெளி பற்றுக்கால் இல்லாத நிலை 6 மெய்யுணர்வு 7 திருவருள் திருவெளியில் 8 குண்டலிணி-கணபதியை 9 சகஸ்ராரத்தில் உரையும் சத்தி 10 புறப்பொருள் வெள்ளம் பாழாக்கிய 11 ஒடுக்க 12 மூலப்பிரகிருதியில் 13 அந்தக்கரணமூலப்பிரகாசாதி 14 தந்மாத்திரையில் 15 ஐம்பூதம் ஐம்புலன் அந்தக்கரணம்4 மாயை ஜீவன் 16 நிரைவாகிய ஆருயிர் 17 ஒடுங்கல் 18 உருவமாகிய 19 அருவத் 20 நினைக்கும் 21 அறிவு வழிபாடு 22 புல்லாங்குழல் 23 சங்கு 24 அகத்தில் காண்டல் கிடைப்பது 25 நடுநாடி 26 புருவநடு உச்சி 27 செவி கண் நாக்கு மூக்கு கூடும் 28 உச்சித்துளை 29 மூலக்கனல் 30 உள்ளக்குறிப்பால் படைப்போன் 31 பரத்தோடு கலக்கும் அறிவு 32 ஆவிகள் பரையாயிருக்க 33 மந்திரபக்தி ஞான கரும தழுவல்கள் 34 உயிர் 35 கடவுள் 36 நிட்டையின்றியே 37 அறுபத்துநாலு கலைகள்-பொருந்தும் அணிமாதிஎட்டு.

திருமந்திரமாலை—3ந் தந்திரம்-சமாதிப்பேறு, அட்டமா சித்தி, கலைநிலை, காய சித்தி கேசரியோகம்

காரியமான உபாதியைத் தான் கடந்து
ஆரிய காரணம் ஏழும்[1] தன் பால் உற
வாரிய காரண மாய்த் தவத்து இடைத்
தார்[2] இயல் தற்பரம் சேர்தல் சமாதியே (619)

தானே அணுவும்[3] சகத்துத்[4] தன் நொய்ம்மையும்[5]
மானாக் கனமும்[6] பரகாயத் தேகமும்[7]
தானாவதும்[8] பரகாயம் சேர் தன்மையும்
ஆனாத வுண்மையும்[9] வியாபியும்[10] ஆம் எட்டே

ஒன்பது வாசல் உடையது ஓர் பிண்டத்துள்[11]
ஒன்பது நாடி உடையது ஓரோரிடம்[12]
ஒன்பது நாடி ஒடுங்க வல்லார்களுக்கு
ஒன்பது காட்சி[13] இல்லை பல வாமே (658)

ஈராறு கால்[14] கொண்டு எழுந்த புரவியை[15]
பேராமல் கட்டிப் பெரிது உண்ண வல்லிரேல்
நீர்[16]ஆயிரமும் நிலம்[17] ஆயிரத் தாண்டும்
பேராது காயம் பிரான் நந்தி ஆணையே (722)

உடம்பினை முன்னம் இழுக்கு என்று இருந்தேன்
உடம்பினுக்கு உள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில் கொண்டான் என்று
உடம்பினை யான் இருந்து ஓம்பு கின்றேனே (725)

அஞ்சனம் போன்று உடல் ஐ[18] அறும் அந்தியில்[19]
வஞ்சக வாதம் அறும் மத்தியானத்தில் (727)
செஞ்சிறு காலையில் செய்திடில் பித்தம் அறும்
நஞ்சு[20] அறச் சொன்னோம் நரை திரை நாசமே

கட்டக்[21] கழன்று கீழ்நான்று வீழாமல்
அட்டத்தைக் கட்டி அடுப்பை[22] அணை கோலி
விட்டத்தைப்[23] பூட்டி மேற்பையைத்[24] தாட் கோத்து
நட்டம் இருக்க நமன் இல்லை தானே (799)

மேலை அண்ணாவில்[25] விரைந்து[26] இரு கால் இடில்
காலனும் இல்லை கதவும்[27] திறந்திடும்
ஞாலம்[28] அறிய நரை திரை மாறிடும்
பாலனும் ஆவான் பராநந்தி ஆணையே (805)

1 மயக்கம் மதம் அவாகவலை உள்சூடு வாட்டம் வியப்பு-திருவருளாற்றல் தொழிலாற்றல் அன்னை ஆள்விதுடைப்போன் காப்போன் படைப்போன் 2 ஒழுங்கு 3 அணிமா 4 மகிமா 5 கரிமா 6 லகிமா 7 பிராப்தி 8 பிரகாம்யம் 9 ஈதத்துவம் 10 வசித்துவம் 11 உடம்புள் 12 நாற்சந்தி 13 உணர்வுகள் 14 மாத்திரை 15 உயிர்ப்பு பிராணாயாமம் 16 நீருள் மூழ்கி 17 நிலத்தின் புதையினும் 18 கோழை 19 மாலையில் 20 நோய் 21 விந்துவைக்கட்டி 22 இடகலை பிங்கலை சுழுமுனை மூன்றும் 23 வீணாத்தண்டு 24 சகசிர அரை 25 உள்நாக்கில் 26 வேகமாகச்சென்று 27 உச்சித்துளை 28 உலகம்.

விளங்கிடும் வாயுவை மேல் எழ உன்னி
நலங்கிடும்[1] கண்டத்து நாபியின் உள்ளே
வணங்கிடு மண்டலம் வாய்த்திடக் கும்பிச்[2]
சுணங்கிட நின்றவை[3] சொல்லலுமாமே (821)

காணும் பரிதியின்[4] காலை இடத்திட்டு
மாணும் மதி[5] யதன் காலை வலத்திட்டுப்
பேணி இவ்வாறு பிழையாமல் செய்வீரேல்
ஆணி[6] கலங்காது அவ் ஆயிரத் தாண்டே (866)

ஓர்[7] எழுத்தாலே உலகு எங்கும் தானாகி
ஈர்[8] எழுத்தாலே இசைந்து அங்கு இருவராய்
மூ[9] வெழுத்தாலே முளைக்கின்ற ஜோதியை
மா[10]வெழுத்தாலே மயக்கமே உற்றதே (885)

ஆறு எழுத்து ஆவது ஆறு சமயங்கள்
ஆறுக்குநாலே[11] இருபத்திநாலு[12] என்பர்
சாவித்திரியின் தலை[13]எழுத்து ஒன்றுஉள
பேதிக்க[14] வல்லார் பிறவி அற்றார்களே (994)

அறிவுரு[15] ஞானத்தை எவரும் அறியார்
பொறி[16] வழி தேடிப் புலம்பு கின்றார்கள்
நெறிமனை[17]உள்ளே நிலைபெற நோக்கில்
எறிமணி[18] உள்ளே இருக்கலும் ஆமே (1009)

தான்[19] அவனாக[20] அவனே தான் ஆயிட
ஆன இரண்டில் அறிவான் பரமாகப்
போனவன் அன்பிது நாலாம்[21] மரபுறத்
தான் அவன் ஆகுமோ ஆசித்த[22] தேவரே (1011)

முத்தி நற் ஜோதி முழுச்சுடராய் அவன்
கற்று[23] அற்று[24] நின்றூர் கருத்து உள் இருந்திடும்
பற்று அற நாடிப் பரந்து ஒளி ஊடு போய்ச் [1035]
செற்று[25] அற்று[26] இருந்தவர் சேர்ந்து இருந்தாரே

தானா அமைந்தவம் முப்புரம் தன்னிடைத்
தானான மூவுரு[27] ஓர் உருத் தன்மையள்
தானான பொன் செம்மை வெண்ணிறத்தாள் கல்வீ
தானான போகமும்[28] முத்தியும் நல்குமே (1047)

1 ஒடுங்கிடும் 2 நிறைத்து 3 சாலந்திரை முத்திரையால் மெய் அமிழ்ந்து கீழ் ஒழுகாது ஒட்டியாணப் பிணிப்பால் உயிர்ப்பு அடங்கும் 4 பிங்கலை 5 இடகலை 6 ஜீவன் உயிர் 7 ஒ 8 ஓ=அ+உ+பரன்+பரை அல்லது பரமான்மா+ஜீவான்மா 9 அ+உ+ம்10ம்=ஜலமகள்-நடப்பாற்றல்-மயக்கும்மாயை-அவித்தை 11ஆறு எழுத்தையும் நான்கு நான்காக பாகுப்பாடு செய்ய 12 காயத்திரி எழுத்துக்கள் 13 பிரணவம்-ஓம் 14 பிரித்து அறிய 15 அருள் கண் வரும் 16 ஐம்பொறிபுலன் 17 உயிரின்கண் உள்ளுணரின் 18 ஒளியின் பத்துவித நாதத்தின் 19 நடுநிலையில் முனைந்து நிற்பவன் 30 இறைவனாக 21 சாயுச்சியம் 22 பேரொளிபிழம்பு 23 கலைகள் அனைத்தும் கற்று2 4 சந்தேகம் விபரீதம் அற்று உணர்ந்து 25 சினம் 26 காமம் களவு கொலை பொய் கூறல் சினம் முதலிய தீய குற்றங்களைக் கடிந்து விலக்கி 27 ஆனவம் கன்மம் மாயை திருவருளம்மை 28 வாழ்வும்

திருமந்திரமாலை-4ந் தந்திரம்-சக்திபேதம், வயிரவி பூரணி, ஆதாரவாதேயம்

அறிவார்[1] பராசக்தி ஆனந்தம் என்பர்
அறிவார் அருவு உருவாம் அவள் என்பர்
அறிவார் கருமம் அவள் இச்சை என்பர்
அறிவார் பரனும் அவளிடம் தானே (1054)

அளி[2] ஒத்த பெண்பிள்ளை ஆனத்த சுந்தரி
புளியுறு புன்பழம்போல்[3] உள்ளே நோக்கித்
தெளி யுறுவித்துப் பரகதி காட்டி
ஒளியுற வைத்து என்னை உய்ய உண்டாளே (1084)

காணும் பலபல தெய்வங்கள் வெவ்வேறு
பூணும் பலபல பொன்[4] போலத் தோன்றிடும்
பேணும் சிவனும் பிரமனும் மாயனும்
காணும் தலைவி நற்காரணி[5] காணே [1087]

உள்ளத்து[6] இதயத்து[7] நெஞ்சத்து[8] ஒரு மூன்றுள்[9]
பிள்ளைத்[10] தடம் உள்ளே பேசப் பிறந்தது
வள்ளல் திருவின் வயிற்றின்[11] உள் மாமாயைக்
கள்ள ஒளியின் கருத்தாகும் கன்னியே (1117)

என் அம்மை என் அப்பன் என்னும் செருக்கற்று
உன் அம்மை[12] ஊழித் தலைவனும் அங்குளன்
மன்னம்மை[13] யாகி மருவி யுரை செய்யும்
பின்னம்மையாய் நின்ற பேர் நந்தி தானே (1129)

நின்ற பராசக்தி நீள்பரன் தன்னொடு
நின்றறி ஞானமும்[14] இச்சையுமாய்[15] நிற்கும்
நன்றறியுங் கிரியா சத்தி நண்ணவே
மன்றன் வற்றுள் மருவிடுந் தானே [1136]

தாவித்[16] தவப்பொருள் தானவன் எம்மிறை
பாவித்து[17] உலகம் படைக்கின்ற காலத்து
மேவிப் பராசக்தி மேலோடு கீழ் தொடர்ந்து
ஆவிக்கும்[18]அப்பொருள்[19] தான் அதுதானே [1153]

பெண்[20] ஒரு பெண்ணை[21] புணர்ந்திடும்[22] பேதமை
பெண்ணிடை[23] ஆணும்[24] பிறந்து கிடந்தது [1159]
பெண்ணுடை ஆண் என் பிறப்பு அறிந்து ஈர்க்கின்ற
பெண்ணுடை ஆண்[26] இடைப்[27] பேச்சற்ற[28] வாறே

1 மெய்கண்டார் பேரின்பம் 2 கருணை 3 பற்றின்றிநிற்கும் 4 அனியம் ஆபரணங்கள் 5 மூலப்பிரகிருதி-தூய மாமாயை 6 சித்தம்–எண்ணம் 7 மனம் 8 புத்தி-இறுப்பு 9 இடகலை பிங்கலை சுழுமுனையுள் 10 நடுநாடி 11 அகத்தினுள் 12 நினைத்தற் குறிய அம்மை 13 நம்மைப்போன்ற ஜீவர்களால் 14 அறிவாற்றலும் 15 விழைவாற்றலுமாய் 16 நிச்சயித்த 17 நினைத்துப் பார்த்து 18 உயிர்களுக்கு 19 பொறிபுலன் கரணங்களிலும் 20 திருவருள் ஆற்றல்-பரை 21 திருவருள்-பரன் 22 பரைஅறிவு பிரமத்தின் பேரறிவோடு கலக்கும் குறிப்பு 23 பேணுதல் நடுவுள் ஏற்பித்தல் 24 ஆளுதல் இன்புறுத்தல் 25 சேர்கின்ற 26 மாதொருபாகன் 27 விரும்பும் நிலைகளும் 28 பெண் ஆண் என்று பேதப்படுத்தும் பேச்சு அற்று விடும்.

திருமந்திரமாலை-4ல் சாம்பவி, நவக்கரி, 5ந் தந்திரம்-மார்க்க, சரியை, கிரியை, யோகம், ஞானம், சன்மார்க்கம்

காணும் பொருளும் கருதிய தெய்வமும்
பேணும் பதியும்[1] பெருகிய தீர்த்தமும்
ஊணும் உணர்வும் உறக்கமும் தான் ஆகக்
காணும் கனகமும் காரிகை[2] யாமே (1302)

விண்ணமர் நாபி இருதய மாங்கிடைக்
கண்ணமர் கூபம்[3] கலந்து வருதலால்
பண்ணமர்ந்த ஆதித்த மண்டலம் ஆனது
தண்ணமர்[4] கூபம் தழைத்தது காணுமே (1396)

விண்ணினைச் சென்று அனுகாது வியன்[5] மேகங்கள்
கண்ணினைச் சென்று அனுகாதுப் பல காட்சிகள்
எண்ணினைச் சென்று அணுகாமல் எணப்படும்
அண்ணலைச் சென்று அணுகா பசு மே பாச[7] (1436)

சமையம் மல சுத்தித் தன் செயல் அற்றிடும்
அமையும் விசேடமும் பரன் மந்திர சுத்தி
சமைய நிருவாணம்[8] கலா சுத்தி யாகும்
அமை மன்னு ஞான மார்க்கம் அபிடேகமே (1450)

கானுறு கோடி கடிகமிழ் சந்தனம்
வானுறு மாமலர் இட்டு வணங்கினும்
ஊனினை[9] நீக்கி உணர்பவர்க்கு அல்லது
தேன் அமுர் பூங்கழல் சேர வொண்ணாதே (1452)

பூவினில் கந்தம் பொருந்தியவாறு போல்
ஜீவனுக்குள்ளே பரைமணம் பூத்தது
ஓவியம் போல உணர்ந்து அறிவாளர்க்கு
நாவி[10] அணைந்த நடுதறி யாமே (1459)

ஞானத்தின் மிக்க அறிநெறி நாட்டில் இல்லை
ஞானத்தின் மிக்க சமயமும் நன்றன்று
ஞானத்தின் மிக்கவை நன் முத்தி நல்காவா
ஞானத்தின் மிக்கார் நரரின் மிக்காரே (1467)

பசு பாச நீக்கிப் பதியுடன் கூட்டிக்
கசியாத நெஞ்சங் கசியக் கசிவித்து [1486]
சுசியாத[11] உண்மைச் சொரூப உதயத்துள்
அசைவானது இல்லாமையான சன்மார்க்கமே

1 சுவர்க்கம் கைலாயம் வைகுண்டம் முதலிய உயர்ந்த நிலைகளும் 2 திருவருள் அம்மை-வனப்பாற்றல்-தூய மாமாயை 3 அமிழ்தக்கிணறு எனும் கழுத்து 4 குளிர்ச்சி எய்தும் 5 பரந்த 6 பொருந்தாது 7 யான் எனும் சிற்றறிவும் எனது எனும் சுட்டறிவும் 8 தூய மந்திரம், பதம் வன்னம் தத்துவம், புவனம், கலை 9 சரீர அபிமானம்-மாமிச உணவை 10 புனுகுப்பூனை 11 அசுத்தம் பொருந்தாத

திருமந்திரம் தந்திரம் 5-சாலோகம், சமீபம், சாரூபம் சாயுச்சியம் சத்திநிபாதம், மந்ததரம், புறச்சமய நிராகாரம்

சாலோகமாதி சரியாதியில்[1] பெறும்
சாலோகம் சாமீபம் தங்கும் சரியையான்
மாலோகம் சேரில் வழியாகும் சாரூபம்
பாலோகம்[2] இல்லாப் பரன் உரு வாமே (1507)

பாசம் பசுவான[3] தாகும் இச் சாலோகம்
பாசம் அருளான[4] தாகும் இச் சாமீபம்
பாசம் சிரமான[5] தாகும் இச் சாரூபம்
பாசங் கரை[6] பதி சாயுச்சியமே (1509)

தங்கிய சாரூபம் தான் எட்டாம்[7] யோகமாம்
தங்கும் சன்மார்க்கம்[8] தனில் அன்றிக் கைகூடா
அங்கத்து உடல் சித்தி சாதனராகுவர்
இங்கு இவராக விழிவற்ற யோகமே (1510)

சாயுச்சியம் ஜாக்கிராதீதம்[9] சாருதல்
சாயுச்சியம் உப சாந்தத்துத்[10]தங்குதல்
சாயுச்சியப் பரமாதல்[11] முடிவிலாச் (1513)
சாயுச்சியம் மனம் தான் ஆனந்த[12] சத்தியே

இருட்டறை[13] மூலை[14] இருத்த கிழவி[15] (குமரி)
குருட்டுக் கிழவனைக்[16] கூடல் குறித்துக்
குருட்டினை தீக்கிக் குணம்பல[17] காட்டி
மருட்டி[18] அவனை மணம்[19] புரிந்தாளே (1515)

மருட்டி[20] புணர்ந்து மயக்கமும் நீக்கி
வெருட்டி[21] வினை அறுத்து இன்பம் விளைத்துக்
குருட்டினை நீக்கிக் குணம்பல காட்டி
அருட்டிகழ் ஞானம் அது புரிந்தாளே (1518)

ஆயத்துள்[22] நின்ற அறு சமயங்களுள்
காயத்துள்[23] நின்ற கடவுளைக் காண்கிலர்
மாயக் குழியில் விழுவர் மனை மக்கள்
பாசத்தில் உற்றுப் பதைக்கின்ற[24] வாறே (1530)

இமயங்களாய் நின்ற தேவர்கள் ஆறு
சமயங்கள் பெற்றனர் சாத்திரம் ஓதி
யமை[25] அறிந்தோம் என்பர் ஆதிப்பிரானும்
கமை[26] அறிந்து அருள் கலந்து நின்றானே.

1 சீலம், நோன்பு, செறிவு அறிவு எனும் நன்னெறி பெறுபேறுவில் 2 விரிவாம் உலகம் 3 செயலற்ற நெகிழ்ச்சியுறு நிலை 4 வருத்துவ தொழிந்து பொருந்து மளவாய் நிற்பது 5 தோற்றதளவான் நிற்பது 6 தோற்றமும் ஒடுங்கி கரைந்து பரமாய் நிற்பது 7 அஷ்டாங்க 8 சீலம் நோன்பு செறிவு அறிவு 9 நனவில் உயிர்ப்பு அடங்கிய உவர்ப்பு நிலை 10 விருப்புவெருப்பற் நிலை 11 பரனோடு ஒப்பக்காண்டல் 12 பரமாய பெருவாழ்வு எய்தல் 13 அறியாமை ஜடவுடல் 14 மயங்கி மறைந்து 15 திருவருள் சக்தி 16 ஜீவாத்மா 17 எண்குணங்களையும் வண்ணமுறபல 18 தெளிவுண்டாக்சி 19 தான் கூடியிருந்து 20 தெளிவித்து 21 அச்சுறுத்தி 22 கட்டினுள் ஒடுங்க 23 ஊனுடம்புள் 24 தடுமாறி உள்ளம் நடுங்கிய 25 அடையத்தக்கது 26 பொறுமையுடன் ஒழுகுவாருடன் பிழை பொறுத்து

ஓங்காரத்து உள்ஒளி உள்ளே உதயமுற்று
ஆங்கார மற்ற அனுபவம் கை கூடார்
சாங்கால முன்னர் பிரவாமை சார்வுருர்
நீங்கார்[1] சமயத்துள்[2] நின்று ஒழிந்தார்களே [1556]

இமயவர்[3] தம்மையும், எம்மையும் முன்னம்
அமைய வகுத்தவன் ஆதி புராணன்
சமயங்கள் ஆறும் தன் தாளிணை நாட
அமையங் குழல்கின்ற ஆதிப் பிரானே [1557]

இத்தவம், அத்தவம் என்று இரு[4] பேர் இடும்
பித்தரைக் காணின் நகும் எங்கள் பேர் நந்தி
எத்தவ மாகிலென் எங்குப் பிறக்கில் என்
ஒத்து உணர்வார்க்கு ஒல்லை[5] ஊர் புகலாமே [1568]

அறிய ஒண்ணாது அவ் உடம்பின் பயனை[6]
அறிய ஒண்ணாத அறுவகை[7] ஆக்கி
அறிய ஒணாத அறுவகை கோசத்து[8]
அறிய ஒண்ணாத ஓர் அண்டம் பதித்ததே [1572]

வைத்தேன் அடிகள் மனத்தின் உள்ளே நான்
பொய்த்தே எரியும் புலன்வழி போகாமல் [1602]
எய்த்தேன்[9] உழலும் இருவினை[10] மாற்றிட்டு
மெய்த்தேன் அறித்தேன் அவ் வேதத்தின் அந்தமே

மேலைச்[11] சொரூபங்கள் மூன்று மிகு சத்தி
பாலித்த[12] முத்திரை பற்றும் பரஞானி
ஆலித்த நட்டமே ஞேயம் புகுந்து அற்ற
மூலைச் சொரூபன் மொழி ஞாதுருவனே [1613]

நாகமும்[13] ஒன்று படம்[14] ஐந்து, நாலது[15]
போகமுள் புற்றில் பொருந்தி நிறைந்தது [1621]
ஆகம்[16] இரண்டும் படம் விரித்து ஆட்டொழிந்
தேகப் படம்[17] செய்து உடம்பு இடமாமே

ஒடுங்கி[18] நிலைபெற்ற உத்தமர் உள்ளம்
நடுங்குவது இல்லை நமனும்[19] அங்கு இல்லை
இடும்பையும் இல்லை இராப்பகல் இல்லை
படும் பயன் இல்லை பற்று விட்டார்க்கே [1624]

1 மயக்கம்நீங்க 2 புறச்சமயத்துள் 3 இமையமலை வாசிகள்-பிறப்புத் தேவர்கள் 4 வேறு படுத்தியிருக்க 5 சீக்கரம்-விரைவில்
6 முக்தியை 7 ஆறுவகை அகச்சமயங்கள் -ஆணவமலம்அறும் வகை 8 உடம்பினுள்சூக்குமங்கள் 9 எமாற்றி 10 பிறப்பு,
இறப்பு 11 அறிவு, அறிபவன், அறியப்படும் பொருள் 12 சாம் பவியாகி 13 உடம்பு 14 பொறிகள் 15 அறம் பொருள்
இன்பம் வீடு 16 சுக்குமம் காரணம் 17 பக்குவம் 18 புலன்வழி செல்லாமல் 19 பிறப்பும், இறப்பு

சாத்திரம் ஓதும் சதுர்களை[1] விட்டு நீர்
மாத்திரைப்[2] போது மறித்து உள்ளே நோக்குமின்
பார்த்த அப் பார்வை பசுமரத்து ஆணிபோல்
ஆர்த்த[3] பிறவி அகல விட்டு ஓடுமே [1631[

ஆற்றில் கிடந்த முதலை கண்டு அஞ்சிப்போய்
ஈற்றுக்[4] கரடிக்கு எதிர்பட்ட தன் ஒக்கும்
நோற்றுத் தவம் செய்யார் நூல் அறியாதவர்
சோற்றுக்கு நின்று சுழல்கின்ற வாறே [1642]

கதிர் கண்ட காந்தம்[5] கனலின் வடிவாம்
மதி கண்ட காந்தம்[6] மணிநீர் வடிவாம்
சதி[7] கொண்ட சாக்கி[8] எரியின் வடிவாம்
எரி[9] கொண்ட ஈசன் எழில் வடிவாமே [1653]

தான்[10] அற்ற தன்மையும் தான் அவன் ஆதலும்
ஏனைய அப் பரையான இயற்கையும்
தான் உறு சாதக[11] முத்திரை சாத்தலும்
ஏனமும்[12] நந்தி பத முத்தி பெற்றதே (1675)

மயலற்று இருளற்று[13] மாமனம்[14] அற்றுக்
கயலுற்ற கண்ணியர் கையிணைக்[15] கற்றுக்
தையலற்ற[16] வரோடுந் தாமே தாமாகிச்
செயலற்று[17] இருந்தார் பர வேடத்தாரே (1678)

குருட்டினை[18] நீக்கும் குருவினைக் கொள்ளார்
குருட்டினை நீக்காக் குருவினைக் கொள்வார்
குருடுங் குருடுங் குருட்டாட்டம் ஆடிக்
குருடுங் குருடுங் குழி[19] விழு மாறே (1680)

கன்றலும்[20] கருதலும்[21] கருமம் சேய்தலும்
தின்றலும்[22] சுவைத்தலும் தீமை செய்தலும் (1686)
பின்றலும்[23] பிறங்கலும்[24] பெருமை கூறலும்
என்றிவை இறைவன்பால் இயற்கை அல்லவே

மன்னும்[25] மலம்[26] ஐந்தும் மாற்றும் வகையோரான்[27]
துன்னிய காமாதி தோயும்[28] தொழில்[29] நீங்கான்
பின்னிய[30] பொய்யன் பிறப்பு இறப்பு அஞ்சாதான்
அன்னியன்[31] ஆவன் அசற் சீடன் ஆமே [1689]

1 பொய்ப் பெருமைகளை 2 இமை கொட்டும் நேரம் 3 பந்தித்த 4 குட்டிபோட்ட 5 சூரிய காந்தக்கல் 6 சந்திரகாந்தக்கல் 7 தீ தட்டும் முக்கிசாக்கி 8 சக்கிமுக்கிகல் 9 மழுவாகிய தீ 10 யான் எனது 11 வேடமும் பழக்கமும் 12 உண்கலம் 13 ஆனவ வல்லிருளற்று 14 கரியமனம் 15 கூட்டுறவு 16 பெண் ஆசையற்ற 17 உலக விவாகார மற்று 18 அஞ்ஞானத்தை 19 பிறவிக் கருக்குழியில் 20 கோபித்தலும் 21 நட்பு, உறவு கருதலும் 22 முனைத்துத் தின்றலும் 23 முறையின்றித்தாழ்த்தலும் 24 முறையின்றி உயர்த்தலும் 25 நிலை பேருடைய 26 ஆனவம் கன்மம் மாயை மறைப்பாற்றல் காரியத்தன்மை 27 சிந்தியான் 28 பொருந்தும் 29 செருக்கு சினம் சிறுமை இவறல் மான்பிறந்தமானம் மாணுவுவகை 30 நிறைந்த 31 புன்னெறியன்

திருமந்திரம், தந்திரம் 6 பக்குவன் ; 7-வது தந்திரம்
பரஆத்ம ஞான லிங்கம்

சாத்திகன்[1] ஆய்ப் பரதத்துவம் தான் உன்னி
ஆத்திக[2] பேதநெறி தோற்றம்[3] ஆகியே
ஆர்த்த பிறவியின் அஞ்சி அறநெறி
சாத்த[4] வல்லான் அவன் சற் சீடன் ஆமே (1696)

சத்தும்[5] அசத்தும்[6] எவ்வாறு எனத்தான் உன்னிச்
சிந்தை உறுக்கி பரன் அருள் கை காட்டப்[7]
பத்தியின் ஞானம் பெறப் பணிந்து ஆனந்தச்
சத்தியில்[8] இச்சைத் தகுவோன் சற் சீடனே (1697)

சீராரு[9] ஞானத்தின் இச்சை செலச் செல்ல
வாராத[10] காதல் குருபரன் பாலாகச்
சாராத[11] சாதக நான்கும்[12] தன்பால் உற்ருேன்
ஆராயும் ஞானத்தன் ஆம் அடி[13] வைக்கவே (1699)

சற்குணம் வாய்மை தயா விவேகந் தண்மை[14]
சற்குரு பாதமே சாயை போல் நீங்காமே
சிற்பர ஞானம் தெளியத் தெளிவு ஓர்தல்
அற்புதமே தோன்றலாகும் சற்சீடனே [1709]

உணர்ந்தேன் உலகினில் ஒண் பொருளாணைக்
கொணர்ந்தேன் குவலயம்[15] கோயில் என் நெஞ்சம்[16]
புணர்ந்தேன்[17] புளிதனும் பெய்யல்ல மெய்யே
பணிந்தேன் பகலவன்[18] பாட்டும்ஒலியே[19] (1748)

அன்று[20] நின்ருன் கிடந்தான் அவன் என்று
சென்று நின்று எண்திசை ஏத்துவர் தேவர்கள்[21]
என்று நின்று ஏத்துவன் எம்பெருமான் தன்னை
ஒன்றி[22] என் உள்ளத்தின் உள் இருந்தானே (1762)

சத்திக்கு மேலே பராசத்தி[23]தன் உள்ளே
சுத்த பரைபதம் தோயாத[24] தூவெளி
அத்தன் திருவடிக்கு அப்பாலைக் அப்பாலாம் (1768)
ஒத்தவும்[25] ஆம் ஈசன் தான் ஆன உண்மையே

சத்தி பரன்தன் விளையாட்டுத் தாரணி
சத்தி பரமும் ஆம் பரன் சத்தியும் ஆகும்
சத்தி பரன்அன்றித் தாபரம்[26] வேறுஇல்லை
சத்திதான் என்றும் சமைந்து உரு ஆகுமே (1772)

1 சத்துவகுணன் 2 கடவுள் உண்டு என்னும் பல 3 வேறுபாடுடைய தோற்றம் 4 உறைந்து நிற்க 5 நிலைப்பும் 6 நிலையாமையும் 7 துணைபுரிய 8 பேரின்ப முத்தி 9 திருவடிப்பேற்றிற்கு உரித்தாய 10 அபக்குவனுக்கு வாராத அன்பு 11 எய்தப்பெருத 12 விவேகம் நிராசை சட்க சம்பந்தி முழுட்சத்துவம் 13 திருவடிதீக்கை 14 பொறுமை 15 உலகம் 16 உள்ளம் 17 அத்துவிதமானேன் 18 சூரியனுக்கும் ஒளியருளும் பிரமம் 19 ஒலிப்பாட்டு நாததத்துவமாகிய வேத ஆகமங்கள் 20 தொன்மையிலேயே கட்புலனாகும் படி 21 புலன்களில் உறையும் விண்ணவர் 22 ஒன்ருய் வேருய் உடனாய்க்கலந்து 23 இயக்கநிலை அறிவுப்பேராற்றல் 24 யாதிலும் தாக்கத்து நிற்கும் 25 பராசக்தியோடு கூடியும் கூடாமலும் 26 தங்கும் நிலைக்களம்-சூட்சுமஞானம்

மலர்ந்த அயன்மால் உருத்திரன் மகேசன்[1]
பலந்[2] தரும் ஐம்முகன்[3] பரவிந்து நாதம்
நலம் தரும் சத்தி பரன் வடிவாகிப்
பலந்தரும் லிங்கம்[4] பரா நந்தி யாமே (1776)

உடல் பொருள் ஆவி உலகத்தால் கொண்டு
படர்வினை[5] பற்று அறப் பார்த்துக் கை வைத்து
நொடியின்[6] அடி வைத்து நுண்ணுணர்[7] வாக்கிக்
கடிய பிறப்பு அற காட்டினன் நந்தியே[8] (1778)

உணர்வு[9] உடையவர்களுக்கு உலகமும் தோன்றும்
உணர்வு[10] உடையார்களுக்கு உறும்துயர் இல்லை
உணர்வு[11]உடையார்கள் உணர்ந்த[12] அக்காலம்
உணர்வு உடையார்கள் உணர்ந்து[13] கண்டாரே

அவனும்[14] அவனும்[15] அவனை[16] அறியார்
அவனை[16] அறியில் அறிவானும்[17] இல்லை
அவனும்[18] அவனும்[19] அவனை[16] அறியில்
அவனும் அவனும் அவன் இவன்[20] ஆமே [1789]

பெருத்தன்மை தான்[21]என யான்[22]என வேறாய்
இருந்தது மில்லை அது ஈசன் அறியும்
பொருந்தும் உடல் உயிர் போல் உமை[23] மெய்யே[24]
திருந்த முன்[25] செய்கின்ற தேவர் பிரானே [1791]

இரு பதம்[26] ஆவது இரவும்[27] பகலும்[28]
உருவது ஆவது உயிரும் உடலும்
அருளது ஆவது அறமும்[29] தவமும்[30]
பொருளது[31] உள்நின்ற போகம்[32] அது ஆமே [1792]

நான் அறிந்த அன்றே[33] இருக்கின்ற ஈசனை
வான்[34] அறிந்தார் அறியாது மயக்கினர்
ஊன் அறிந்து உள்ளே உயிர்க்கின்ற ஒண்சுடர்[35]
தான் அறியான் பிள்ளை யார் அறிவாரே [1797]

அருளில் பிறந்திட்டு அருளில் வளர்ந்திட்டு
அருளில் அழிந்து இளைப்பாறி மறைந்திட்டு
அருளான ஆனந்தத்து ஆரமுது ஊட்டி
அருளால் என் நந்தி அகம் புகுந்தானே [1800]

1 ஆண்டான் 2 முத்திப்பலன் 3 அருளோன் 4 சூட்சும சரீரம் 5 எஞ்சுவினை-சஞ்சிதம் தலையில் திரு 7 பசுகரணங்களை பதிகரணங்களாக 8 பரஞானகுரு 9 தோற்றந்தளவானே திரியக் காணல் 10 அறிவில்லாத தோன்றி மறைவளவானே இரட்டுறக்காணல் 11 பதி பசு பாச விளக்கம் 12 பதியை அறிந்த 13 பதி இயல்பின் உண்மை நிலை 14 உலகியலாகிய அன்பியல் 15 வீட்டியல்பாகிய அருளியல் 16 பரமாத்மாவை 17 ஆருயிரின் சிற்றுணர்வு நிலை 18 கர்மகாண்டி 19 பக்திகாண்டி 20 பரபோதமனந்தவன் 21 பிரமம் 22 ஜீவன் 23 சிற்சத்தி 24 உடலாக 25 படைப்புக்குமுன் காலத்தில் 26 நிலை 27 அறியாமை 28 அறிவுநிலை 29 அன்பியல் 30 அருளியல் 31 மெய்ப்பொருளது 32 நுகர்வாம் பேரின்பம் 33 கண்ம எஞ்சுவினை ஏறுவினை அற்ற பொழுதே 34 சுவர்க போகங்களை 35 அறிவுப் பெருஞ்சுடர்.

ஆயும் அறிவோடு அறியாத மாமாயை[1]
ஆய கரணம் படைக்கும் ஐம் பூதமும்
ஆய பல இந்திரியம் அவற்றுடன்
ஆய அருள் ஐந்துமாம்[2] அருள் செய்கையே (1805)

தானே படைத்திடும் தானே அளித்திடும்
தானே துடைத்திடும் தானே மறைந்திடும்
தானே இவை செய்து தான் முத்தி தந்திடும்
தானே வியாபித்த[3] தலைவனும் ஆமே (1809)

விளையும் பரவித்து தானே வியாபி[4]
விளையும்[5] தனி மாயை[6] மிக்க மாமாயை[7]
கிளை ஒன்று தேவர் கிளர் மனு வேதம் (1813)
அளவு ஒன்று இல்லா அண்ட கோடிகள் ஆமே

விளக்கினை[8] ஏற்றி வெளியை அறிமின்
விளக்கினின் முன்னே[9] வேதனை மாறும்
விளக்கை[10] விளக்கும் விளக்கு[11] உடையார்கள்
விளக்கில் விளங்கும் விளக்கு[12] அவர் தாமே (1818)

அருளது என்ற அகலிடம்[13] ஒன்றும்
பொருளது என்ற புகலிடம்[14] ஒன்றும்
மருளது நீங்க மனம் புகுந்தானைத்
தெருளுரும்[15] பின்னைப் பரகதி யாமே (1821)

உள்ளம் பெருங் கோயில்[16] ஊன் உடம்பு ஆலயம்
வள்ளல் பிராணார்க்கு வாய்[17] கோபுர வாசல் (1823)
தெள்ளத் தெளிந்தார்க்குச் ஜீவன் பரைலிங்கம்
கள்ளப்[18] புலன் ஐந்தும் காளா[19] மணி விளக்கே

சாத்தியும் வைத்தும் சுயம்பு[20] என்று ஏத்தியும்
ஏத்தியும் நாளும் இறையை அறிகிலார்
ஆத்தி[21] மலக்கிட்ட அகத்து இழுக்கற்றக்கான்
மாத்திக்கே[22] செல்லும் வழியது வாமே (1841)

மேவிய[23] ஞானத்தின் மிக்கிடின் மெய்ப்பரன்
ஆவியின்[24] ஞான நெறி[25] நிற்றல் அர்ச்சனை
ஓ அற உள்[26] பூசனை செய்யில் உத்தமன்
சேவடி சேரல் செயலறல் தானே (1849)

1 மூலப் பிரகிருதி 2 பராசக்தி திரோத்ன சத்தி இச்சா சத்தி கிரியா சத்தி ஞான சக்தி - வனப்பாற்றல் நடப்பாற்றல் அன்பாற்றல் தொழிலாற்றல் அறிவாற்றல் 3 பிரமமே நிறைவுடைமையான் ஏனையர் ஆணைக்கடவுளர் ஒவ்வொன்றே செய்யும் உரிமையர் 4 சுத்த மாயை வியாபகம் 5 காரியப்படும் வினையும் 6 தூய மாயை தேவர்களுக்கும் மந்திரங்களுக்கும் 7 அவித்தை மூலம் பிரகிருதி ஆவரண விட்சேப அண்ட கோடிக்கும் 8 அருள் ஒளி 9 முன் கர்மானுசார 10 அருள் ஒளியை 11 ஞானம் 12 பேரொளி 13 பரவெளி 14 ஆருயிர்கள் புகலுறுமிடம் 15 உண்மை தெளிவு 16 கருவறை 17 வாய்மை 18 கள்ள வழியில் இருக்கும் 19 அழகிய மாணிக்க 20 இயற்கை கடவுள் 21 ஆசை 22 முத்தி உலகம் 23 அடைதற்கரிய அறிவினுள் 24 அவ்விடத்தில் 25 ஓதல் ஓதுவித்தல் கேட்டல் கேட்பித்தல் சிந்தித்தல் 26 கொப்பூழ் ஓம் இடம், நெஞ்சம் பூசை இடம் புருவ நடு செம்பொருள் காணும் நிலைக்களம்.

திருமந்திரம் தந்திரம் 7-குரு மகேசுர பூசை, அடியார், சமாதி, விந்து

இந்துவும்[1] பானுவும்[2] என்று எழுகின்றது ஓர்
விந்துவும் நாதமும் ஆகி மீதானத்தே[3]
சிந்தனை சாக்கிராதீதத்தே[4] சென்றிட்டு
நந்தியைப் பூசிக்க நற்பூசை யாமே (1853)

படமாடக்[5] கோயில் பகவற்கு[6] ஒன்று ஈயில்
நடமாடக்[7] கோயில் நம்பர்க்கு அங்கு ஆகா
நடமாடக் கோயில் நம்பர்க்கு ஒன்று ஈயில்
படமாடக் கோயில் பகவற்கு அது ஆமே (1857)

என் தாயோடு என் அப்பன் ஏழ்[8] ஏழ் பிறவியும்
அன்றே பரனுக்கு எழுதிய ஆவணம்[9]
ஒன்ருய் உலகம் படைத்தான் எழுதினான் (1876)
நின்ருன் முகில் வண்ணன் நேர்[10] எழுத்தாயே

அப் பரன் உள்[11] நின்ற அருளை அறிந்தவர்
உச்சியம்[12] போதாக வுள்ளமர் கோவிற்குப்
பிச்சை[13] பிடித்து உண்டு பேதம் அற நினைத்து
இச்சை விட்டு ஏகாந்தத்தே ஏறி இருப்பரே [1885)

மெய்யக ஞான மிகத் தெளிந்தார் களுங்
கை யக[14] நீண்டார் கடைத்தலைக்கே[15] செல்வர்
ஐயம் புகாமல் இருந்த தவசியார்
வையகம் எல்லாம் வர[16] இருந்தாரே (1891)

யோகி எண் சித்தி அருள் ஒலி வாதனை[17]
போகி தண் புத்தி புருடார்த்த நன்னெறி
யாகு நன் சத்தியும் ஆதார[18] சோதனை
ஏகமும்[19] கண்டு ஒன்றில் எய்தி நின்ருனே (1898)

ஊனமின் ஞானி நல் யோகி உடல் விட்டால்
தான்[20] அற மோனச் சமாதியுள் தங்கியே
தான் அவன் ஆகும் பரகாயம்[21] சாராதே (1906)
ஊனமின் முத்தராய் மீளார் உணர்வு[22] உற்றே

வீயம்[23] அது ஆகிய விந்துவின் சத்தியால்
ஆய அகண்டமும் அண்டமும் பாரிப்பக்
காய ஐம் பூதமும் காரிய மாயையில்
ஆயிட[24] விந்து அகம் புறம் ஆகுமே (1928)

1 சந்திரனும் சூரியனும் சகஸ்ராரம் 4 சாக்கிரமும் சொப்பனமும் இல்லாத நடுநிலைமை 5 பிண்டவடிவு தத்துவம் அறிவினைக் காட்டும் 6 மூர்த்திக்கு 7 நிற்றல் இருத்தல் கிடத்தல் நடத்தல் செல்லல் துப்பல் விழித்தல் இமைத்தல் 8 எழுவகையாக விரிந்த 9 ஆலோலை-நோயாளிக்கும் மருத்துவருக்கும்-மாணவர்-ஆசிரியருக்கும் கட்டுப்பட்டவன் போன்றது 10 சான்றாக ஒத்துஇடல் 11 உடல் உயிர் பரன் என 12 உச்சி பொழுது தன் நிழல் அடங்கி வெளியே தெரியாது 13 தாள் உண்டாலும் ஆண்டவனுக்கே என்று நினைவால் கோவிலுண 14 உள்ளன்போடு கொடுக்க 15 மனையறம் புரியும் நல்லார் மனைத்தலைக்கே 16 அன்னம் உருக்கமுடன் கொண்டு வந்தால் உண்பேன் என 17 செம்பைப்பொன்னுக்கு இரசவாதனை 18 ஆறு நிலைக்களங்கள் 19 முழுவதும் 20 தான் என்னும் உயிர்த்தன்மை 21 வேறோர் உயிர்க்கண் 22 தத்துவ ஞானம் 23 பெருமை உடைத்து 24 பால் தயிரானாற் போன்ற திரிபு.

வித்தினில்[1] அன்றி முளை[2] இல்லை அம்முளை
வித்தினில் அன்றி வெளிப்படுமாறு இல்லை
வித்தும் முளையும் உடன் அன்றி வேறல்ல
அத்தன்மை ஆகும் பரன்நெறி காணுமே (1932)

அருந்திய அன்னம் அவை மூன்று கூறுஆம்
பொருந்தும்[3] உடல் மனம் போம்[4] மலம் என
இருந்து உடல் மனமாம் கூறு[5] சேர்ந்திட்டு
இருந்தன முன்னாள் இரதம்[6] அது ஆகுமே (1933)

பார்க்கின்ற மாதரைப் பாராது அகன்று போய்
ஓர்க்கின்ற உள்ளம் உருக அழல் மூட்டிப்
பார்க்கின்ற கண் ஆசை பாழ்பட மூலத்தே[7]
சேர்க்கின்ற யோகி பரையோகி தானே (1937)

கலக்கு[8] நாள் முன்னுள் தன்னிடைக் காதல்
நலத்து ஆக வேண்டில் அந் நாரி உதரக்
கலத்தின் மலத்தைத் தண் சீதத்தைப் பித்தை
விளக்குவன செய்து மேல் அணைவீரே (1955)

விந்து வென் வீசத்தை[9] மேவிய மூலந்து
நந்திய அங்கியினாலே நயந்து எரித்த
அந்தமில் பானு[10] அதி கண்டம் மேல் ஏற்றிச்
சந்திரன் சார்புறத் தண் அமுது ஆகுமே (1958)

உரமடி[11] மேதினி[12] உந்தியில் அப்பு[13] ஆம்
விரவிய தன்முலை மேவிய[14] கீழ் அங்கி[15]
கருமுலை மீமிசை கைக்[16] கீழில் காலாம்[17]
விரவிய சுந்தர[18] மேல் வெளி[19] ஆகுமே (1974)

விந்து[2] அபரம் பரம் இரண்டாய் விரிந்து
அந்த அபரம் பர நாதம் ஆகியே
வந்தன தம்மில் பரன் கலை[21]யாதி வைத்து
உந்தும் அருனோதயம்[22] என்ன உள்ளத்தே

கடம் கடம் தோறும் கதிரவன் தோன்றில்
அடங்கிட மூடில்[23] அவற்றில் அடங்கான்
விடம் கொண்ட கண்டனும் மேவிய காயத்து
அடங்கிட[24] நின்றதும் அப் பரிசாமே (2002)

1 பிரம்மத்தில் 2 பரை-சக்தி 3 வளர்க்கும் 4 சக்கையாகக்கழியும் 5 பருவுடம்பு காற்றுடம்பு மனவுடம்பு புத்தி உடம்பு இன்ப உடம்பு 6 அன்ன இரசம் 7 மூலாதாரத்தில் வீணாத்தண்டு ஊடே 8 புணரும் 9 வித்தை 10 சூரியன் 11 உறுதியான பாதம் 12 நிலம் 13 நீர் 14 மார்பு வரை 15 தீ தத்துவம் 16 தோழ்வரை 17 காற்று தத்துவம் 18 கழுத்து 19 ஆகாயம் 20 தூயமாயை 21 நிலைக்கள்-நீக்கி நிலைப்பி நுகர்வி அமைப்பி அழுத்தி 22 அருள் நன் தோற்றம் 23 தாம்தாம் கண்டவாறே மூடினால் 24 நீக்கமறவிரவி உள்ளும் புறமும்

திருமந்திரம்-தந்திரம் 7-பசு புருடன், ஜீவன், போதன் அடக்கல்,

அன்னம் இரண்டு உள ஆற்றங் கரையினில்
துன்னி இரண்டும் துணைப் பிரியாத அன்னந்
தன்நிலை[1] அன்னம் தனி ஒன்றது என்றக்கால்
பின்ன மட[2] அன்னம் பேர் அணுகாதே [2006]

படர் கொண்ட ஆல்[3] அதின் வித்து அது[4] போலச்
சுடர் கொண்ட அணுவினைத்[5] தூ வழி செய்ய
இடர்[6] கொண்ட பாச இருள் அற ஓட்டி
நடர்[7] கொண்ட நல்வழி நாடலும் ஆகுமே [2009]

அணு[8] உள் அவனும்[9] அவனுள் அணுவும்
கணு[10] அற நின்ற கலப்பது உணரார்
இணை இலி ஈசன் அவன் எங்கும் ஆதித் [2010]
தணிவு[11] அற நின்றான் சரா அசரம் தானே

மாயா உபாதி[12] வசத்து ஆகும் சேதனத்து
ஆய குரு அருளாளே அதில் தூண்ட
ஓயும்[13] உபாதியோடு ஒன்றி[14] ஒன்றாது[15] உயிர்
ஆய துரியம் புகுந்து அறிவாகவே [2014]

அறிவாய் அறியாமை நீங்கி அவனே
பொறிவாய்[16] ஒழிந்து எங்குந்தான் ஆன போதன்
அறிவாய் அவற்றின் உள் தான் ஆய் அறிவன்
செறிவாகி[17] நின்ற அச் ஜீவனும் ஆகுமே (2019)

புலம்[18] ஐந்து புள்[19] ஐந்து புள் சென்று மேயும்
நிலம்[20] ஐந்து நீர்[21] ஐந்து நீர்மையும்[22] ஐந்து
குலம்[23] ஒன்று கோல்கொண்டு மேய்ப்பான்[24] ஒருவன்
உலம்[25] வந்து போம் வழி[26] ஒன்பது தானே (2025)

அஞ்சும்[27] அடக்கு அடக்கு என்பர் அறிவிலார்
அஞ்சும் அடக்கும் அமரரும் அங்கு[28] இல்லை
அஞ்சும் அடக்கில் அசேதனம்[29] ஆம் என்றிட்டு
அஞ்சும் அடக்கா[30] அறிவு[31] அறிந்தேனே [2033]

பாய்ந்தன பூதங்கள்[32] ஐந்தும் படர் ஒளி
சார்ந்திடு ஞானத்து தறியினில் பூட்டிட்டு
வாய்ந்துகொள் ஆனந்தம் என்னும் அருள்செய்யில்
வேய்ந்து கொள் மேலை விதி[33] அதுதானே [2038]

1 தானே விளங்கும் பேறறிவு பெரும் பொருளாம் 2 பேரறிவு விளக்க விளங்கும் சிற்றறிவு ஜீவன் 3 ஆலமரம் 4 விண்கண் அடங்கியிருப்பது 5 ஜீவனை 6 மிகுந்துன்பம் 7 நாடற்கரிய திருநெறி 8 நுன்னிய உயிர் பரம அனு 9 பிரமமும் 10 பேதம் 11 எல்லை 12 தடை 13 யோகத்தடைகள் நீங்கிய 14 உடல், கலன், உலகு உணா பற்றினுள் ஒன்றினும் 15 பற்றின்றிய பேருறக்கநிலை 16 நிலையிலாப் பொறிகளின் வாயிலாக வன்றி நிலையுள்ள அறிவின் வாயிலாக ஐந்த வித்தலாய் 17 கலந்து 18 அறிதற்கருவி-செவிமெய் நோக்கு நாக்கு மூக்குக்கு நிலைக்களப்பொறிகள் 19 ஞானேத்திரியங்கள்-புலன்கொள்-அறிதற்கருவி 20 ஓசை ஊறு ஒளி சுவை நாற்றம் எனும் தந்மாத்திரை 21 கேட்டல் உறுதல் காண்டல் சுவைத்தல் முகர்தல் எனும் அவற்றிற்குரிய பண்புகள் 22 இந்திரியங்கள் மேயும் தொழில் விரிவு 23 அறிவில் ஊறும் பயன் 24 ஜீவாத்மா 25 மிகவும் அலைவுற்று 26 சக்கை கழியும் துளைகள் 27 மேலே ஓதிய புலம்புள் நிலம் நீர் நீர்மை 28 சொர்க்கலோகத்திலும 29 ஜடப்பொருள் 30 செய்யாமல் வாழும் வகை 31 நல்லறிவு வழி திரும்பும் நற்நெறிக்கண் ஒழுகும் அந்தக்கரணம் 32 புறத்துப்பாயும் இயல்பினராண புலன்கள் 33 வாழ்வு முறை.

உணர்வு ஒன்று இலா மூடன் உண்மை ஓராதோன்
கணு[1] இன்றி வேத ஆகம நெறி காணான்
பணி ஒன்று இலாதோன் பர நிந்தை செய்வோன்
அணுவின்[2] குணத்தோன் அசத்குரு வாமே (2044)

பாசத்தை நீக்கிப் பரனோடு தன்னையும்
நேசத்து நாடி மலம்அற நீக்குவோர்
ஆசற்ற சற்குரு ஆவோர் அறிவற்றுப்
பூசற்கு[3] இரங்குவோர் போதக் குருவன்றே (2052)

பரிசனவேதி[4] பரிசித்தது எல்லாம்
வரிசை தரும் பொன்வகை ஆகுமா போல்
குரு பரிசித்த குவலயம்[5] எல்லாம்
திரி[6] மலம் தீர்ந்து பரகதி ஆகுமே (2054)

சத்தும்[7] அசத்தும்[8] சதசத்தும்[9] தான் காட்டி
சித்தும் அசித்தும் பரைபரத்தே சேர்த்துச்
சுத்தம் அசுத்தம் அறச் சுகமான சொல்
அத்தன் அருள் குருவாம் அவன் கூறிலே (2058)

ஏறு[10] நெறியே மலத்தை எரித்தலால்
ஈறில்[11] உரையால் இருளை அறுத்தலான்
மாறில்[12] பசு பாசம் வாட்டலால் வீடுக
கூறு பரனே குருவாம் இயம்பிலே (2066)

கண்காணி[13] இல்லை என்று கள்ளம் பல செய்வார்
கண்காணி இல்லா இடம் இல்லை காணுங்கால்
கண்காணியாகக் கலந்து எங்கும் நின்றானைக்
கண்காணி கண்டார் களவு ஒழிந்தாரே (2067)

ஒன்று இரண்டாகி[14] நின்று ஒன்றி ஒன்றாயினோர்க்கு
ஒன்றும் இரண்டும்[15] ஒருகாலும் கூடிடா (2077)
ஒன்று இரண்டு என்றே உரை தருவோர்க்கு எல்லாம்
ஒன்று இரண்டாய் நிற்கும்ஒன்றேடுஒன்று[16]ஆனதே

இன்பத்துள்ளே பிறந்து இன்பத்துள்ளே வளர்ந்து
இன்பத்துள்ளே நினைக்கின்ற இது மறந்து[17]
இன்பத்துள்ளே சிலர் சோறோடு கூறை[18] என்று
துன்பத்துள்ளே நின்று தூங்குகின்றார்களே (2089)

1 ஞான உபதேசம் 2 பந்தமுள்ள ஆருயிர் 3 கலகத்துக்கு-மாயப்போர்க்கு மனம் 4 உலோகங்களை பொன் ஆக்கும் மூலிகை 5 பாரிலுள்ள உயிர்கள் 6 ஆனவம் கன்மம் மாயை 7 பரம்பொருள் நிலையானது 8 நிலையில்லாதது 9 ஆருயிர் கட்டு நிலையில் மலத்துடனும் ஒட்டு நிலையில் பிரம்மத்துடனும் ஒடுங்கி அது அதுவாய் ஆதல் 10 சீலம், நோன்பு, செறிவு, அறிவு 11 அழியாத நல் உபதேச 12 ஒழியாத 13 மேற்பார்வையிட்டு ஏற்பன செய்விப்போன் 14 ஜீவனாகி 15 ஆனவம் கன்மம் மாயை 16 துவிதம் 17 மயங்கி 18 துணிகளுமாக.

பெறுதற்கு அரிய பிறவியைப் பெற்றும்
பெறுதற்கு அரிய பிரான் அடி பேணார்
பெறுதற்கு அரிய பிராணிகள்[1] எல்லாம்
பெறுதற்கு அரியது ஓர் பேறு[2] இழந்தாரே (2090)

ஆர்வ மனமும் அளவில்லா இளமையும்
ஈரமும் நல்லவை என்று இன்புறு காலத்து
தீர வருவது ஓர் காமத் தொழில் நின்று
மாதவன்[3] இன்பம் மறந்து ஒழிந்தார்களே (2091)

இருந்தேன் மலர் அனைந்து இன்புற வண்டு
பெருந்தேன் இழைக்கின்ற பேற்றிமை யோரார்
வருந்தேன் நுகராது வாய் புகு தேனை
அருந்தேனை[4] யாரும் அறிய கிலாரே [2097]

செல்லும் அளவும் செலுத்துமின் சிந்தையை
வல்ல[5] பரிசால்[6] உரைமின்கள் வாய்மையை[7]
இல்லை எனினும் பெரிதுளன் எம் இறை
நல்ல அரநெறி நாடுமின் நீரே (2103)

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமன் இல்லை நாணாமே
சென்றே புகும்கதி இல்லை நும் சித்தத்து
நின்றே நிலைபெற நீர் நினைத்து உய்மினே(2104)

முத்தியை[8] ஞானத்தை[9] முத்தமிழ்[10] ஓசையை
எத்தனை காலமும் ஏத்துவர் ஈசனை
நெய்த்தலைப் பால்போல் நிமலனும் அங்குளன்
அத்தகு ஜோதி அது விரும்பாரே (2115)

நரரும்[11] சுரரும்[12] பசு[13] பாச[14] நண்ணிக்
கருமங்களாலே கழிதலில் கண்டு (2120)
குரு என்பவன் ஞானி கோதிலன்[15] ஆகுல்
பரம் என்றல் அன்றிப் பகர்[16] ஒன்றும் இன்றே

காயப்பை[17] ஒன்று சரக்குப் பல உள
மாயப்பை[18] ஒன்று உண்டு மற்றும் ஓர்பை[19] உண்டு
காயப் பைக்குள் நின்ற கள்வன்[20] புறப்பட்டால்
மாயப்பை மண்ணா[21] மயங்கிய வாரே (2122)

1 ஆறறிவுயிரோடு பிறந்தும் ஐயறிவுவரையினராசனவர் 2 முத்திஇன்பம் 3 பெரும் தவத்தையுடையவன் – வனப்பாற்றலோடு கூடிய நிலை 4 திருவடி இன்பத்தேனை அருந்தும் என் அருமையை-திருமந்திர மாலையின் உயர்ந்த உள்ளுணர்வுக்னை 5 இயன்ற 6 அளவு 7 முப்பொருள் உண்மை 8 வீடுபேற்றை 9 திருவடியுணர்வை 10 இயல், இசை இன்பகூத்து, அறம் பொருள் இன்பம் 11 மண்ணுலகத்தாரும 12 விண்ணுலகத்தாரும் 13 யானெனும் தன்மை 14 எனது எனும் தன்மை 15 குற்-றம் இல்லாதவன் 16 கூறுதல் 17 தேகம் 18 மாயையின் காரியம்-ஷட்கோச தத்துவம் 19 ஒர்த்து உணரும் உள்ளம்-ஆருயிர் 20 உயிரை உடலாக்கொண்டு மறைந்து இயந்தியக்கும் ஒளித்தருளும் ஆன்மா 21 மண்ணோடு மண்ணாய்.

அத்தன்[1] அமைத்த உடல் இரு[2] கூறினில்
சுத்தமது ஆகிய சூக்குமம் சொல்லுங்கால்
சத்த பரிச ரூப ரச கந்தம்
புத்தி மனம் அகங்காரம் புரியட்ட காயமே (2123)

உண்டு[3] நரக சுவர்க்கத்தில் உள்ளன
கண்டு[4] வீடும் சூக்கம் காரணமாய்ச் செலப்
பண்டு[5] தொடரப் பரகாய யோகிபோல்
பிண்டம்[6] எடுக்கும் பிறப்பு இறப்பு எய்தியே [2133]

ஞானிக்குக் காயம் பரமே தனுவாம்[7] அஞ்
ஞானிக்குக் காயம் உடம்பே அது[8] ஆகும் [2135]
மேல் நிற்கும் யோகிக்கு விந்துவும்[9] நாதமும்[10]
மோனிக்குக்[11] காயம் மூப்[12] பாழ் கெட்ட முத்தியே

விஞ்ஞானத்[13] தோர்க்கு ஆணவமே மிகுதனு
எஞ்[14]ஞானத் தோர்க்குத் தனு மாயை தான் என்பர்
அஞ்ஞானத் தோர்க்குக் கன்மம் தனு வாகும்
மெய் ஞானத் தோர்க்குப் பர தனு மேவுமே [2136]

பூதங்கள் ஐந்தும் பொறி அவை ஐந்து உள்ளும்
ஏதம்[15] படஞ் செய்திருந்த புற நிலை
ஓதும்[16] மலம் குணம் ஆகும் ஆதாரமோடு
ஆதி அவத்தைக் கருவி[17] தொண்ணூற்றாறே
(2146)

முன்னிக்கு[18] ஒரு மகன் மூர்த்திக்கு[19] இருவர்
வன்னிக்கு[20] மூவர் வதுவைக்கு[21] நால்வர்
கன்னிக்குப்[22] பிள்ளைகள்[23] ஐவர் முன்நாள் இல்லை
கன்னியைக் கன்னியாய்க் காதலித்தானே (2152)

தானம்[24] அமிழ்ந்து தனி புக்கு இதயத்து
மானம்[25] அழிந்து மதி கெட்டு மாலாகி[26]
ஆன விரிவு அறியா அவ்வியத்தத் தின்[27]
மேனி அழிந்து சுழுத்தி அது ஆமே (2155)

சுழுனையைச் சேர்ந்து உள்ள மூன்றுடன்[28] காட்சி
எழுமிய[29] சித்தம்[30] பிராணன் தன் காட்சி
ஒழுக்க கமலத்தின்[31] உள்ளே இருந்து
விழுமப்[32] பொருளுடன் மேவி நின்றனே (2156)

1 ஈசுரன் 2 மல ஆற்றலால் நுண்ணுடம்பும், ஸ்தூல சிறப்புடம்பர்கிய பருவுடம்பும் 3 இருவினைப்பயனை அனுபவித்து 4 அறிந்து நுகர்ந்தது 5 பழைய வினை 6 வேறு 7 உடம்பு 8 பிறந்து இறக்கும் தூலம் 9 அத்தனும் 10 அன்னையும் 11 முதன்மையான ஞானம் 12 ஆனவம் கண்மம் மாயை 13 ஆணவமலம் மட்டுமுடையோர் 14 குறைந்த-எஞ்சியுள்ள 15 குற்றம் 16 விரிந்த கருவிகள் 17 தத்துவம் 18 ஆகாயத்துக்கு 19 வாயுவுக்கு 20 தீக்கு 21 நீருக்கு 22 மண்ணுக்கு 23 தன் மாத்திரைகள் 24 கண்டம் 25 பெருமை 26 மயங்கி 27 மூலப்பகுதியின் 28 எண்ணம் உயிர்ப்பு ஆளும் 29 பேருறுக்க நிலை 30 உயிர்ப்பு 31 மூலம் 32 மேன்மையான

திருமந்திரம், தந்திரம் 8-கீழாலவத்தை, மத்திய சாக்கிர நனவாதி

ஊமை[1] எழுத்தோடு பேசும்[2] எழுத்து உறில்
ஆமை அகத்தினில் அஞ்சும் அடங்கிடும்
ஓம் மயம் உற்றது உள் ஒளி பெற்றது
நாமயம்[3] அற்றது நாம் அறியோமே (2158)

துரியம் இருப்பதும் சாக்கிரத்து உள்ளே
நரிகள்[4] பதினாலு நஞ்சு உண்டு செத்தன
பரிய புரவியும்[5] பாரிப் பறந்தது
துரியம் இறந்த இடம்[6] சொல்ல ஒண்ணாதே (2158)

ஆசான் முன்னே துயில் மாணவர் தமைத்
தேசாய[7] தண்டால் எழுப்பும் செயல் போல்
நேசாய[8] ஈசனும் நீடு ஆணவத்தரை
ஏசாத[9] மாயாள் தன்னாலே எழுப்புமே (2163)

மத்திமம்[10] ஒத்த சிலந்தி வலயத்து உள்
ஒத்து அங்கு இருந்து உயிர் உண்ணுமாறுபோல்
அத்தனும் ஐம்பொறியால் ஆடகத்துள்[11] நின்று
சத்தம் முதல் ஐந்தும்[12] தான் உண்ணுமாறே (2170)

பத்தோடு பத்தும் ஓர்மூன்றும்[13] பகுதியும்
உய்த்த துரியமும்[14] உள் உணர் காலமும்[15]
மெய்த்த வியோமமும்[16] மேலைத் துரியமும்[17]
தத்துவ நால் ஏழ் என உன்னத் தக்கதே [2176]

ஆகின்ற தொண்ணூறோடு ஆறும் பொது என்பர்
ஆகின்ற ஆறாறும் சைவர் தத்துவம்
ஆகின்ற நாலேழ் வேதாந்தி, வயிணவர்க்கு
ஆகின்ற நாலாறு, ஐயைந்து மாயாவாதிக்கே [2179]

பசுக்கள்[18] பல வண்ணம் பால்[19] ஒரு வண்ணம்
பசுக்களை மேய்க்கின்ற ஆயன்[20] ஒரு வண்ணம்
பசுக்களை மேய்க்கின்ற ஆயன் கோல்போடில்[21]
பசுக்கள் தலைவனைப் பற்றி விடாவே [2193]

புரியட்டகமே[22] பொருந்தல்[23] நனவு
புரி அட்டகம் தன்னின் மூன்று[24] கனவு
புரி அட்டகத்தில் இரண்டு[25] சுழுத்தி
புரி அட்டகத்து ஒன்று[26] புக்கல் துரியமே (2201)

1 மெய்(ம்) 2 உயிர்-அ உ 3 தற்போதம் 4 அறிதற்கருவி-அகக்கலன் 5 தன்மாத்திரைகளும் 6 துரியாதீதம் 7 புகழ்பெற்ற 8 கருணை-அருள் 9 குற்றமற்ற 10 வலை கூடு 11 சரீரத்துள் 12 தன்மாத்திரைகள் 13 கரணம் நான்கு 14 புருடன் 15 ஆருயிர் 16 ஈசனும் 17 பிரமமும் 18 ஆருயிர்கள் 19 அறிவு நிலை 20 பரமாத்மா 21 அருள் செய்தால்-சலமகளை யொடுக்கினால் மலைமகள் வெளிப்பட்டால் 22 பஞ்சபூதங்கள் மனம் எழுச்சி இறுப்பு ஆக எட்டு நுண்ணுடல் 23 தொழிற்படும் நிலை 24 மனம் எழுச்சி இறுப்பு 25 புத்தி அகங்காரம் 26 அகங்காரம்-இறுப்பு.

நனவின் நனவு[1] புலனில் வழக்கம்
நனவில் கனவு நினைத்தல்[2] மறத்தல்
நனவில் சுழுத்தி உண்உடல் இலாமை
நனவில் துரியம் அதீதத்து நந்தியே [2202]

துரிய நனவாம் இதம்[3] உணர் போதம்[4]
துரியக் கனவாம் அகம் உணர் போதம்
துரியச் சுழுத்தி வியோமம்[5] துரியந்
துரியம் பரம் எனத் தோன்றிடும் தானே [2205]

தான் எங்குமாய் அவன் ஐம்மலம் தான் விட்டு
ஞானம் தனது உருவாகி நயந்த பின் (2207)
தான் எங்குமாய் நெறி நின்றது தான் விட்டு
மேனந்தச் சூக்குமம் அவை வன்னம்[6] மேலிட்டே

உயிர்க்கு உயிராகி உருவாய்[7] அருவாய்[8]
அயர்பு[9] உணர்வாகி அறிவாய்ச் செறிவாய்[10]
நயப்புறு சத்தியும் நாதன் உலகாதி [2210]
இயற்பு[11] இன்றி[12] எல்லாம் இருள் மூடமாமே

மலக் கலப்பாலே மறைந்தது சத்தி
மலக் கலப்பாலே மறைந்தது ஞானம்
மலக் கலப்பாலே மறைந்தனன் தாணு[13]
மலக் கலப்பு அற்றான் மதி ஒளி [4] யாமே [2213]

திகைக்கின்ற சிந்தையுள் சிங்கங்கள்[15] மூன்று
நகைக்கின்ற நெஞ்சுள் நரிக்குட்டி[15] நான்கு (2214)
அசைக்கின்ற நெஞ்சின்உள் ஆனைக்கன்று[16] ஐந்து
பகைக்கின்ற நெஞ்சுக்குப் பால்[18]இரண்டு ஆகுமே

நின்ற அவன் ஆசான் நிகழ் துரியத்தன் ஆய்
ஒன்றி உலகின் நியமாதிகளாய்[19] உற்றுச்
சென்று துரியாதீதத்தே சிலகாலம்
நின்று பரனாய் நின்மலன்[20] ஆமே [2217]

ஆன விளக்கு ஒளி தூண்டும் அவன்[21] என்னத்
தான் விளக்கு ஒளியாம்[22] மூல சாதனத்[23]
தான விதி மூலத் தானத்தில் அவ்விளக்கு
ஏனை மதிமண்டலங்[24] கொண்டு எரியுமே[25] [2222]

1 புலன் வழிச் செல்லா ஒடுக்க நிலை 2 சித்தத்தின் தொழிற்பாடு 3 இன்பவாயிலாம் உறுதிநிலை 4 அறியும் அறிவு 5 அருள் வெளி 6 எல்லாவற்றின் தன்மை 7 ஸ்தூலமாய் 8 சூக்கும உயிராய் 9 சார்பு-பொருள் தன்மையில் வேறாய் 10 நிறைவாய் 11 இயற்கை 12 இல்லாவிட்டால் 13 தூண் போன்ற உறுதுணை இறைவன் 14 சந்திரன் சூரிய ஒளியில் பிரகாசிப்பது போல் ஆருயிரும் பரமான்ம பேரொளியால் விளங்கும் 15காமம் வெகுளி மயக்கம் 16 மனம் புத்தி சித்தம் அகங்காரம் 17 செவி மெய் நோக்கு நாக்கு மூக்கு 18 பிரவிர்த்தி நிவிர்த்தி-ஓடுதல் ஒடுங்குதல் 19 நிஷ்காம கடமைகளாய் 20 பந்த பாசங்கள் நீங்கிய தூய்மை 21 தூண்டுவோர் 22 பேரொளி பிரமம் 23 உயிர்ப்புப்பயிற்சி 24 புருவநடு 25 விளங்கும்

உள் நாடும் ஐவர்க்கு[1] மண்டை[2] யொதிங்கிய
விண் நாட நின்ற வெளியை[3] வினவுறில்
அண்ணாந்து பார்த்த ஐவர் கூடிய சந்தியில்[4]
கண் நாடி[5] காணும் கருத்து அது என்றானே [2223]

மாயையில் சேதனன்[6] மன்னும் பகுதியோன்[7]
மாயையின் மற்றது நீவு[8] தன் மாயையால்
கேவலம்[9] ஆகும் சகல[10] மாயோனியுள்
தோயும் மனிதர் துரியத்து[11] உள் ஜீவனே [2226]

தன்னை அறிய சுத்தன்[12] தன் கேவலன்[13] தானும்
பின்னமுற நின்ற பேத சகலனும்[14] (2227)
மன்னிய சத்து அசத்துச் சதசத்துடன்[15]
துன்னுவர்[16] தம் தம் தொழிற்கு அளவாகவே

தானே தனக்குப் பகைவனும் நட்டானும்
தானே தனக்கு மறுமையும் இம்மையும் [2228]
தானே தான் செய்த வினைப்பயன் துய்ப்பானும்
தானே தனக்குத் தலைவனும் ஆமே

மும்மலம்[17] கூடி முயங்கி[18] மயங்குவோர்
அம்மெய்ச் சகலத்தர்[19] தேவர் சுரர் நரர்
மெய்ம்மையில் வேதா விரி மிகு கீடாம் தம்
தம்முறை யோனி[20] புக்கார்க்கும் சகலரே (2244)

சுத்தத்தில் சுத்தமே தொல் பர மாகுதல்
சுத்தத்தில் கேவலம் தொல் உபசாந்தமாம்[21]
சுத்த சகலம் துரிய விலாசமாம்[22] (2252)
சுத்தத்தில் இம்மூன்றுஞ் சொல்லலும் ஆமே

தன்னை அறியாது உடலை முன் தான் என்றுன்
தன்னை முன் கண்டான் துறியந்[23] தனைக்
கண்டான்
உன்னும் துரியமும் ஈசனோடு ஒன்றாக்கால்
பின்னையும் வந்து பிறந்திடும் தானே (2264)

பரம்ஆம் அதீதமே பற்று[24] அறப் பற்றப்[25]
பரம்ஆம் அதீதம் பயிலப் பயிலப் (2274)
பரம்ஆம் அதீதம் பயிலாத் தபோதனர்[26]
பரம்ஆகார் பாசமும் பற்று ஒன்று அறாதே

1 அறிதற்புலன்களுக்கு 2 உச்சித்தொளை 3 அருள்வெளி பரம் 4 கேட்டல் நாடல் தெளிதல் திளைத்தல் 5 உள் நோக்கி 6 ஆருயிர் ஆன்மா 7 மூலப்பகுதி 8 ஒழித்தற்கேயாம் 9 மலம் நீங்கிய தனித்தூயநிலை புலம்புநிலை 10 கூடிய புணர்வுநிலை 11 புரிவு-சுத்தம் மலமகற்றிய நிலை 12 புரிவி 13 புலம்பி 14 புணர்வி-உடல் கலன் உலகு உணர்வுடன் கூடிய நிலை 15 சார் பிநிற்பி 16 கூடுவர் 17 ஆணவம் கன்மம் மாயை 18 கலந்து 19 மும்மலம் கூடி மருள்வோர் 20 பிறப்பு 21 தவ ஒடுக்கம் 22 இனிய உறைவிடம் 23 அப்பால்நிலை 24பண்டே பற்றிய பந்தபாசம் 25 நிராதார வழிபாடு 26 தவத்தோ ரல்லாதார்.

உன்னை அறியாது உடலை முன் நான் என்றாய்
உன்னை அறிந்து துரியத்து உற நின்றாய் (2279)
தன்னை அறிந்தும் பிறவி தணவாது[1] அதால்
அன்ன வியாத்தன்[2] அமலன் என்று அறிதியே

பொன்னை[3] மறைத்தது பொன்னணி பூடணம்
பொன்னின் மறைந்தது பொன்னணி பூடணம்
தன்னை[4] மறைத்தது தன் கரணங்கள் ஆம்
தன்னின் மறைந்தது தன் கரணங்களே (2289)

மரத்தை[5] மறைத்தது மாமத யானை
மரத்தின் மறைந்தது மாமத யானை
பரத்தை[6] மறைத்தது பார்முதற் பூதம்
பரத்தின் மறைந்தது பார்முதற் பூதமே (2290)

துரியத்தில் ஓர் ஐந்தும்[7] சொல்லகராதி[8]
விரியப் பரையின் மிகு நாத மந்தம்
புரியப் பரையின் பரா அவத்தா போதம்
திரியப்[9] பரமம் துரியம் தெரியவே (2292)

நின்றான் அருளும் பரமும் முன் நேயமும்
ஒன்றாய் மருவும் உருவும் உபாதியும்[10]
சென்றான் என்னை விடுத் தாங்கிற் செல்லாமையும்
நன்றான ஞானத்தின் நாதப் பிரானே (2295)

சாத்திகம் எய்து நனவு எனச் சாற்றுங்கால்
வாய்த்த இராசதம் மன்னும் கனவு என்ப
ஓய்த்திடும் தாமதம் உற்ற சுழுததி ஆம்
மாய்த்திடு[11] நிர்க்குண மாசில் துரியமே (2296)

வெல்லும்[12] அளவில் விடுமின் வெகுளியை
செல்லும் அளவும் செலுத்துமின் சிந்தையை
அல்லும் பகலும் அருளுடன் தூங்கினால்
கல்லும்[13]பிளந்து சுடுவெளி[14] யாமே (2303)

காய்ந்த[15] இரும்பு கனலை அகன்றாலும்
வாய்ந்த கனல் என வாதனை[16] நின்றாற்போல்
ஏய்ந்த[17] கரணம் இறந்த துரியத்துத்
தோய்ந்த கருமத் துரிசு[18] அகலாதே [2309]

1 நீங்காது 2 பரப்பு எங்கும் நிறைந்து கலந்திருப்பவன் 3 நகையென பார்க்கும் போது தங்கம் தெரியாது, தங்கம் என பார்த்தால் நகை எண்ணம் இராது. 4. உடல்கலன் ஆயுங்கால் ஆருயிர் தோன்றா, ஆருயிர் ஆன்மாவை ஆராயும் வழி உடல் கலன் ஒரு சிறிதும் புலனகா 5 கைவினை உருவினை ஆயுங்கால் மரத்தின் வேறுபாடு தோன்றாது, மரத்தைப்பற்றி எண்ணுங்கால் செய்யப்பட்ட உருவினைப் பற்றி தோன்றாது 6 சுட்டியுணரப்படும் உலகப்பொருள்களை ஆராயுங்கால் பிரமம் பண்புகள் நண்ணுவதில்லை, பிரம்மத்தின் எண்பெரும் குணங்களை உண்ணுங்கால் உலகுடற்பொருள் எண்ணம் சிறிதும் தோன்றாது. 7 நனவுகனவு உறக்கம் பேருறக்கம் ஒடுக்கம் 8 அகரம் முதலிய 9 ஒடுங்க, ஒழிய 10 காரணவுடம்பு 11 முக்குணங்களை மாயுமாறு 12 உரனுடையாளராம 13 அகங்காரமும் 14 பரம ஆகாயம், அறிவுப்பெருவெளி 15 பழுக்கக்காச்சிய 16 பசை 17 அகம் அகப்புறம், புறம், முத்திரக்கலன் 18 கன்மவாசனை.

தானே பரமான தன்மை தலைப்பட[1]
ஆன மலமும் அப்பாச பேதங்களும்[2]
மான குணமும்[3] பரஆன்மா[4] உபாதியும்
பானுவின்[5] முன்மதி[6] போல் படராவே[7] [2314]

நெருப்பு உண்டு நீர் உண்டு வாயுவும் உண்டங்கு
அருக்கனும் சோமனும் அங்கே அமரும் [2315]
திருத்தக்க[8] மாலும் திசைமுகன் தானும்
உருத்திர சோதியும் உள்ளத்து[9] உள்ளாரே

தான் அவன் ஆகும் சமாதி கை கூடினால்
ஆன மலம் அறும் அப் பசுத்தன்மை[10] போம்
ஈனமில் காயம் இருக்கும் இருநிலத்து[11] [2320]
ஊனங்கள்[12] எட்டும் ஒழித்து ஒன்றுவோர்கட்கே

அறிகின்றிலாதன ஐயேழும்ஒன்றும்[13] [2323]
அறிகின்ற என்னை[14] அறியாது இருந்தேன்
அறிகின்றாய் நீ என்று அருள் செய்தான் நந்தி[15]
அறிகின்ற நான் என்று அறிந்து கொண்டேனே

சத்தும்[16] அசத்தும்[17] சதசத்தும்[18] தான் கூடிச்
சித்தும் அசித்தும் பரைசித்ததாய் நிற்கும்
சுத்தம் அசுத்தம் தொடங்காத் துரியத்துச்
சுத்தரா மூன்றுடன் சொல்லற் றவர்களே [2328]

இல்லதும்[19] உள்ளதும்[20] யாவையும் தானாகி
இல்லதும் உள்ளதும் ஆய் அன்றும் அண்ணலைச்
சொல்லது[21] சொல்லிடில் தூராதி தூரம் என்று
ஒல்லை உணர்ந்தால் உயிர்க்கு உயிராகுமே [2335]

உயிர்[23] இச்சை ஊட்டி உழிதரும்[24] சத்தி
உயிர் இச்சை வாட்டி யொழித்திடு ஞானம்[25]
உயிர் இச்சை ஊட்டி உடன் உறலாலே[26]
உயிர் இச்சை வாட்டி உயர் பதம் சேருமே [2336]

எய்தினர் செய்யும் இரு[27] மாயா சத்தியின்
எய்தினர் செய்யும் இரு [8] ஞான சத்தியின்
எய்தினர் செய்யும் இரு[29] ஞால சத்தியின்
எய்தினர் செய்யும் இறைஅருள் தானே [2338]

1 எய்த-கிட்ட 2 ஐவகை மலம் 3 முக்குண தீமைகளும் 4 பசுத்தன்மை நீங்கிய ஆன்மா 5 சூரியன் 6 சந்திரன் 7 அடங்கும் 8 பஞ்ச பூதங்களையும் இயக்கும் தெய்வங்களாகிய 9 அண்டத்தில் உள்ளவை பிண்டத்தில் உண்டு-மூலம், நாபி, மேல்வயிறு நெஞ்சம், கழுத்து, உள்நாக்கு, புருவநடு, உச்சித்துளை 10 சிற்றுணர்வு 11 நிலவுலகம்-பூமண்டலம், பரமண்டலம் 12 பொய் கொலை, களவு, கள், காமம், கடன் இரத்தல், வெகுளல் 13 முப்பத்தாறு மெய்களும் 14 என் ஆத்மாவை 15 இறைவனை ஞானகுரு 16 உண்மையின் நிலைப்பு 17 பொய்யின் நிலையாமை 18 கூட்டுப் பெயரியான சார்பு சத்துடனும் அசத்துடனும் கூடுதற்கு உரிமையுடையது ஜீவன் 19 காரியத்திலும் 20 காரணத்திலும் 21 சொல்லினால் 22 உள்ளவாறு 23 உயிருக்கு 24 அலையச்செய்யும் 25 அருள்-வனப்பாற்றல் 26 பிரமம் உயிருடன் இருத்தலால் 27 சுத்த அசுத்த 28 அறிவு விளக்கம் 29 உலகில் துய்ப்பன துய்க்கும்.

பேதம்[1] அபேதம்[2] பிறழ்[3] பேதா அபேதமும்
போதம்[4] புனர்போதம்[5] போதமும்[6] நாதமும்
நாத மூடனாத நாதாதிநாதமும்[7]
ஆதன்[8] அருளின் அருள் இச்சை யாமே (2343)

தான்[9] என்று அவன்[10] என்று இரண்டு என்பர் தத்துவம்
தான் என்று அவன் என்று இரண்டு அற்ற தன்மையை
தான் என்று இரண்டுன்னார் கேவலத்[11] தானவர்
தான் இன்றி தானாகத் தத்துவ சுத்தமே[12] (2348)

தன்னினில்[13] தன்னை[14] அறியும் தலைமகன்
தன்னினில் தன்னை அறியத் தலைப்படும்[15]
தன்னினில் தன்னைச் சார்கிலன் ஆகில்
தன்னினில் தன்னையும் சார்தற்கு அரியவே (2349)

அறியகிலேன் என்று அரற்றாதே நீயும்
நெறிவழியே சென்று நேர்பட்ட பின்னை
இருசுடர்[16] ஆகி இயற்ற வல்லானும் (2349)
ஒரு சுடராய்[17] வந்து என் உள்ளத்து உள் ஆயே

ஊனோர்[18] உயிரோர்[19] உறுகின்றதே இன்பம்[20]
வானோர் தலைவி[21] மயக்கத்துற நிற்கத்
தானோ பெரிது அறிவோம் என்னும் மானுடர்
தானே பிறப்போடு இறப்பு அறியாரே (2354

தன்னை[22] அறியத் தனக்கு[23] ஒரு கேடு[24] இல்லை
தன்னை அறியாமல் தானே கெடுகின்றான்
தன்னை அறியும் அறிவை [5] அறிந்தபின் (2355)
தன்னையே[26] அர்ச்சிக்கத் தான்[27] இருந்தானே

அறிவுக்கு[28] அழிவு இல்லை ஆக்கமும்[29] இல்லை
அறிவுக்கு[30] அறிவு[31] அல்லது ஆதாரம்[32] இல்லை
அறிவே அறிவை அறிகின்றது என்றிட்டு
அறைகின்றன மறை ஈறுகள்[35] தாமே (2358)

அறிவு[36] அறியாமையை[37] நீவி[38] அவனே[39]
பொறிவாய் ஒழிந்து[40] எங்கும் தானான[41] போது
அறிவாய் அவற்றின் உள் தான் ஆய் அறிவின்
செறிவாகி[42] நின்றவன் ஜீவனும் ஆமே (2366)

1 வேற்றுமை 2 ஒற்றுமை 3 பிறழ்வு எனும் 4 இயற்கையறிவு 5 கல்வியால் செயற்கையறிவு 6 அறிவின் வளர்ச்சி 7 பரநாதம் 8 ஆருயிர் ஆன்மா 9 ஆருயிர் 10 பேருயிர் 11 அருள்தனிமை 12 பொருளுண்மை 13 தன உடலில 14 ஆன்மாவை 15 மிக்கெழுந்து தோற்றியருள்வன் 16 பிரமம் ஜீவன்-பேருயிர் ஆருயிர் 17 பரமான்மா ஜீவான்மாவாகிய அடியேனை அவன் திருவடிகீழ் அடக்கி 17 சூக்குமதேகம் 18 ஸ்தூலதேகம் 20 இன்பம் அடைகின்றதாகக் கூறுகின்றனர் 21 பரை 22 பரமான்மாவை 23 ஜீவனுக்கு 24 பிறப்பு-இறப்பு 25 தவப்பயனாக கொடுக்கப்படும் ஒப்பிலா தனியறிவை 26 பரமாத்மாவையே 27 ஜீவாத்மா 28 ஆருயிர்களின் அறிவுக்கு 29 தோற்றமாகிய உற்பத்தியும் 30 சிற்றறிவுள்ள உயிர்களுக்கு 31 முற்றறிவுள்ள பேறறிவு பரமான்மா 32 சார்பு 33 ஆருயிரறிவே 34 பேருயிர் பரமான்மாவை 35 உபநிஷத்துக்கள்-வேதாகமங்கள்-இறைநூல்கள் 36 ஞானேந்திரியங்களால் அறியும் சுட்டறிவு 37 மனம்புத்தியால் அறிந்தேன் எனும் சிற்றறிவு 38 ஒழித்து 39 புல்லறிவு பேதமை நீங்கிய மேலோனே 40 புலன்களை கடந்து 41 ஏகான்மாவான 42 சொல் முற்றறிவாகி

நித்தம்[1] பரனோடு உயிருற்று நீள் மனம்
சத்தம் முதல் ஐந்து தத்துவத்தால்[2] நீங்கிச்
சுத்தம்[4] அசுத்தம்[5] தொடரா வகை நினைத்து
அத்தன்[6] பரன்பால் அடைதல் சித்தாந்தமே (2373)

தேடும் இயம்[7] நியமாதி[8] செ று அகன்று[9]
ஊடுஞ் சமாதியில் உற்றுப் பராபரை
பாடுஉறச்[10] ஜீவன் பரமாகப் பற்றறக் (2376)
கூடும் உபசாந்தம்[11] யோகாந்தக் கொள்கையே

வேதாந்தம் சித்தாந்தம் வேறுஇல்லா முத்திரை
போதாந்த[12] ஞானம் யோகாந்தம்[13] பொது ஞேயம்[14]
நாதாந்தம் ஆனந்தம் சீர் உதயமாகும்
மூதாந்த[15] முத்திரை மோனத்து[16] மூழ்கவே (2386)

வேதாந்த தொம்[17] பத மேவும் பசு[18] என்பர்
நாதாந்த பாசம் விட நின்ற நன்பதி
போதாந்த தற்பதம்[19] போயிரண்டு ஐக்கியம்[20]
சாதாரணம்[21] பரை சதயுச்சியம் ஆமே (2372)

அனாதி ஜீவனை ஐம்மலம்[22] அற்றப் பாலாய்
அனாதி அடக்கித் தனைக் கண்ட பரையாய்த்
தன்ஆதி மலம்[23] கெடத் தத்துவ அதீதம்[24] (2401)
வினாவு நீர் பால்ஆதல்[25] வேதாந்த உண்மையே

மன்னிய[26] சோஅகம்[27] மாமறை யாளர்தம்
சென்னியதான[28] பரையோகமாம்[29] ஈதுஎன்ன
அன்னது சித்தாந்த மாமறையாய் பொருள்
துன்னிய[30] ஆகமநூல் எனத் தோன்றுமே (2403)

அறிவு அறிவு என்ற அறிவும்[31] அனாதி
அறிவுக்கு அறிவாம் பதியும்[32] அனாதி
அறிவினைக்கட்டிய பாசம் அனாதி
அறிவுப்[33] பதியில்[34] பிறப்பு அறும் தானே (2405)

பசுப்[35] பலகோடி பிரமன் முதலாய்ப்
பசுக்களைக் கட்டிய பாசம் மூன்று உண்டு[36]
பசுத்தன்மை நீக்கி அப்பாசம் அறுத்தால்
பசுக்கள் தலைவனைப் பற்றி விடாவே (2406)

1 எப்போதும்-என்றும் 2 மெய்களால்-தந்மாத்திரைகளால் 3 பற்றுநீங்கி 4 தூயமாயை 5 தூவாமாயை 6 பரம்பொருள் 7 தீயவை அடக்கிவிலக்கல் 8 நல்லவற்றில் நடக்குதல் முதலியவற்றில் 9 கடந்து சமாதியடைவர் 10 அருகு பொருந்த 11 தலைப்படுதல் 12 அறிவின் முடிவே அருள் 13 செறிவின் முடிவு 14 அறியப்படும் பொருள்-பிரமம் 15 பழமையான முடித்த-முடிவான 16 மேன்மை ஞானம் 17 துவம் நீ என முன்னிலை சுட்டாய் 18 ஆருயிர் 19 அஃதுஎனும் சேய்மைச்சுட்டு-அறிவின் முடிநிலையாம் இயற்கை பேரறிவு 20 அஸி-ஆகிறாய்-ஆருயிரும் பேருயிராகி பதியும் இரண்டறக்கூடும் கூட்டம் 21 தத்துவமஸி முப்பொருள் உண்மை கற்பிப்பார் திருவருள் இயல்பு 22 ஆணவம் கன்மம் மாயை மாயையாக்கம் நடப்பாற்றல் 23 இடைச்சேர் ஆணவம் 24 முப்பத்தாறு தத்துவங்களுக்கும் அப்பாலாய் 25 பாலுடன் கலந்து பாலின் சுவையும் நிறமும்பெறும் பாலாய்த்திகழும் 26 நிலைபெற்ற 27 அதுநான் என்னும் 28 தலையால் சிறந்த 29 பரத்துடன் கூடிய சக்தியே நான் 30 ஆராயும் எழில் 31 ஆன்மா நூல் ஆருயிர் 32பரமான்மா-பேருயிர் 33பரமான்மா 34 ஆன்மாவில் பதியும் காலத்து 35 ஆன்மா பாசத்தால் கட்டுண்ட உயிர் 36 ஆணவம் கன்மம் மாயை 37 பரமான்மாவை

திருமந்திரம்-பதிபசுபாசம் வேற்றுமை அடித்தலையறியும் திறம்

முக்குற்றம், முப்பரம்

ஆகும் உபாயமே[1] அன்றி அழுக்கு அற்று
மோகம்அறச் சுத்தன் ஆதற்கு மூலமே[2]
ஆகும் அறுவை[3] அழுக்கேற்றியே[4] அற்றல்[5] போல்
ஆகுவது எல்லாம் அருட்பாசம்[6] ஆகுமே [2422]

பாசம்[7] பயிலும் உயிர் தானே பரமுதல்[8]
பாசம் பயிலும் உயிர் தானே பசு என்ப
பாசம் பயிலப் பதி பரம்[9] ஆதலால்
பாசம் பயிலப் பதி பசு வாகுமே (2423)

காலும்[10] தலையும் அறியார் கலதிகள்[11] [2425]
கால் அந்தச் சத்தி அருள் என்பர் காரணம்
பால் ஒன்று ஞானமே பண்பார்[12] தலை உயிர்
கால்[13] அந்த ஞானத்தைக் காட்ட வீடு ஆகுமே

காமம் வெகுளி மயக்கம் இவை கடிந்து[14]
ஏமம்[15] பிடித்து இருந்தேனுக்கு எறிமணி[16]
ஓம் எனும் ஓசையின் உள்ளே உறைவதுஓர்
தாமம்[17] அதனைத் தலைப்பட்ட வாறே (2434)

தோன்றிய[18] தொம்பதம் [9] தற்பதம் சூழ்தர
ஏன்ற[20] அசிபதம் இம் மூன்றோடு எய்தினோன்
ஆன்ற[21] பராபரம்[22] ஆகும் பிறப்பு அற
ஏன்றனன்[23] மாளப்[24] பரமாய் இருக்குமே (2437)

அணுவும்[25] பரமும்[26] அசிபதத்து ஏய்ந்து[27]
கணு[28] ஒன்று இல்லாத பரமும் கலந்தால்
இணை அறு பால்[29] தேன[30] அமுது[3] என இன்பத்து
துணை[32] அதுவாய் உரை அற்றிடத் தோன்றுமே

தோன்றி என் உள்ளே சுழன்று எழுகின்றது ஓர்
மூன்று படி[33] மண்டலத்து முதல்வனை
ஏன்று எய்தி இன்புற்று இருந்தே இளங்கொடி[34]
நான்று[35] நலம் செய் நலம் தருமாறே (2445)

பற்று[37] அறப் பற்றில்[38] பரம் பதிஆவது
பற்றுஅறப்[39] பற்றில் பரன் அறிவே பரம்
பற்றுஅறப் பற்றினில்[40] பற்ற வல்லோர் களுக்கே
பற்றுஅறப் பற்றில் பரம்[41] பரம்[42] ஆமே (2448)

1 வினைமாயைகளைக்கூட்டல் வழிவகைள் 2 விட்சேபம் மூலமாகும் 3 வேஸ்டி 4 உவர் மண் கலந்து 5 அடித்துப்போக்குதல் 6 நடப்பாற்றல் 7 சுமை 8 முதல் பரமாகும் 9 முதன்மை 10 வழியும் 11 வீணர்கள் 12 திருவருட்பண்பு எட்டும் 13 திருவருள் 14 நீக்கி 15 திருவடிப்பேற்றின்பம் 16 அடிக்கும் மணி 17 பர ஒளி 18 பிறப் பிறப்புக்குட்பட்டுத் தோன்றிவரும் 19 அந்த நீ 20 பொருந்திய 21 பூரணமான-நிறைந்த 22 முழுமுதற்சார்பினன் 23 மலச்சார்பால் என்றுகொண்டோன் 24 நலச்சார்பால் மலச்சார்புமாண்டொழிய 25 ஆருயிர் ஆன்மா 26 திருவருள் பரமான்மா 27 கூடி 28 தடை 29 ஆருயிர் 30 பேருயிர் 31 சீரருள் 32 பகுதி 33 சோம சூரிய அக்கினி 34 குண்டலினி 35 உயிர்ப்புப்பயிற்சியால் எழுப்பி கலந்து 36 வந்து எய்தும் 37 உலகியல் பற்றுக்கள் 38 இறைவன் பற்றினைப்பற்றில் 39 எப்பற்றுமின்றி 40 திருவடிப்பற்றினில் 41 ஜீவான்ம 42 பரமான்மா.

திருமந்திரம்-தந்திரம் 8-பரலட்சனம், முத்துரியம், மும்முத்தி முச்செரூபம்

ஆதியும் அந்தமும் இல்லாத அரும் பதி
சோதிப் பரஞ்சுடர் தோன்றத்[1] தோன்றாமையின்[2]
நீதியதாய் நிற்கும் நீடிய அப் பர
போதம் உணர்ந்தவர் புண்ணியத் தோரே (2453)

சத்தின்[3] நிலையினில் தான் ஆன சத்தியும்[4]
தற்பரையாய் நிற்கும் தானாம் பரற்குஉடல்[5]
உய்த்தகும் இச்சையில்[6] ஞானாதி[7] பேதமாய்
நித்த நடத்து நடிக்கும்[3] மா நேயத்தே[9] (2459)

தற்பரம்[10] மன்னும்[11] தனிமுதல் பேரொளி [2462]
சிற்பரம் தானே[12] ஜெகம் உண்ணும் போதமும்
தொற்பதந் தீர் பாழில்[13] சுந்தரச் ஜோதி புக்கி
அப்புறம் அற்றது[14] இங்கு ஒப்பில்லை தானே

வெளி கால் கனல் அப்பு மேவும்மண் நின்ற[15]
தளியாகிய தற்பரம் காண அவன் தான்
வெளி கால் கணல் அப்பு மேவும் மண்ணின்ற
வெளியாய சத்தி அவன் வடிவாமே[16] [2464]

நனவின் நனவாதி[17] நாலாம் துரியம்
தனது உயிர் தொம் பதம் ஆமாறு போல
வினைஅறு ஜீவன் நனவாதீ யாகத்
தனய பர[18] துரியம் தற்பதமே[19] (2372)

ஜீவன் தன் முத்தி அதீதம்[20] பரமுத்தி[21]
ஒயு உபசாந்தம் பரைமுத்தி ஆனந்தம்
மூவயின் முச்செரூபம் முத்தி முப்பால் அதாய்
ஓவுறுதாரத்தில்[22] உள்ளும் நாதாந்தமே [2474]

மூன்றுஉள மாளிகை[23] மூவர்[24] இருப்பிடம்
மூன்றினின் முப்பத்தாறு முதிப்பு[25] உள
மூன்றினின் உள்ளே முளைத்து எழும் ஜோதியை
காண்டலும் காயக் கணக்கு[26] அற்றவாறே [2479]

கல்[27] ஒளி மாநிறம் சோபைக் கதிர்தட்ட[28]
நல்ல மணி ஒன்றினாடி ஒண் முப்பதம்[29]
சொல் அறு முப்பாழில்[30] சொல்அறு[31] பேருரைத்
தல்லறு முத்திராந்தத்து[32] அனுபூதியே[33] [2483]

1 நல்லார்க்கு தோன்றியும் 2 பொல்லார்க்குத்தோன்ருதும் 3 சத்திமானாகிய பிரம்மத்தின் 4 வனப்பாற்றலும் 5 பிரம்மத்துக்கு ஸ்தூலசூக்கும உடலாகும் 6 அன்பாற்றலில் 7 ஆதி அற்றல் அறிவாற்றல் தொழிலாற்றல் விழைவாற்றல் முதலிய 8 திருவிளையாடலாகும் 9 பிரம்மத்தினிடத்தில்லே 10 தானே முழு முதலாய் 11 நிலை பெற்றிருக்கும் 12 அவன் திருவருளால் ஆருயிர்கள் 13 தன் காமம் கெட்டாள்தலைப்பட்டாள்-ஆசையற்ற இடம் 14 நீ என்னும் முன்னிலைப் பெயர் நீங்கி படர்க்கை பொருளுடன் பிரிப்பின்றி ஒன்ருய் கலந்து அதன் பெயரே பெற்று விளங்கும் 15 பாரிடை ஐந்தாய் நீரிடை நான்காய் தீயிடை மூன்றாய் வளியிடை இரண்டாய் வெளியிடை ஒன்றாய் நின்றருளும் 16 திருவாணையே பிரமத்தின் திருமேனியாகும் 17 நனவு கனவு சுழுத்தி துரியம் பரதுரியம் 18 அப்பால் நிலையில் பராவத்தையே 19 அது என்னும் பிரம்மமே 20 அப்பால் நிலல 21 அருட்பேறு 22 பிரணவத்தில் 23 ஸ்தூல சூக்கும் காரணதேகம் 24 சத்ருபசித்ரூப ஆனந்த-இச்சை கிரியை ஞானம் 25 மெய்கள்-தத்துவங்கள் 26 பிறப்பு இறப்பு 27 ஸ்படிகக்கல் 28 பொருந்த 29 தத்துவம் அஸி 30 உடல் மெய் உணர்வு மெய் உணர்ந்து மெய் 31 அசபா காயத்திரியைத் தோனிந்து 32 கையடையாளம் 33இறவா இன்பத்தழுந்திய இன்பி.

ஒளியை[1] ஒளிசெய்து ஓம் என்று எழுப்பி
வளியை வளிசெய்து[2] வாய்த்திட[3] வாங்கி
வெளியை[4] வெளிசெய்து மேல்[5] எழ வைத்துத்
தெளியத் தெளியும் பரை பதந்தாமே (2248)

தற்பதம் தொம்பதம் தானாம்[6] அசிபதம்
தொற்பத[7] மூன்றும் துரியத்துத் தோற்றவே
நிற்பது உயிர் பரன் இகழ் பரையும் மூன்றின்
சொற்பதமாகுமாம் தொந் தத்து அசியே (2488)

ஆகிய அச் சோயந்[9] தேவதத்தன் இடத்து
ஆகியவை[10] விட்டால் காயம்[11] உபாதானம்[12]
ஏகிய[13] தொந் தத் தசி என்ப மெய் அறி
வாகிய ஜீவன்[14] பரன்[15] பரை[16] யாமே (2495)

மாயப் பாழ் ஜீவன் வியோமப்[17] பாழ் மன் பரன்
சேய[18] முப் பாழ் எனப் பரன்சத்தியில் ஜீவன்
ஆய வியாப்தம்[19] எனும் முப்பாழாம்[20] அந்தத்
தூய சொரூபத்தில் சொல் முடிவாகுமே (2496)

செற்றிடும் ஜீவஉபாதித்[21] திறன் ஏழும்
பற்றும் பரோபாதி[22] ஏழும்[23] பகர் உரை
உற்றிடும் காரிய காரணத்தோடு அற
அற்றிட அப் பரை யாகும் அணுவனே[24] (2501)

முத்திக்கு வித்து[25] முதல்வன் தன் ஞானமே
பக்திக்கு வித்துப் பணிந்து உற்றுப் பற்றலே[26]
சித்திக்கு[27] வித்துப் பரைபரம் தான் ஆதல்[28]
சத்திக்கு வித்துத் தனது உபசாந்தமே[29] (2506)

நின்றும் இருந்தும் கிடந்தும் நிமலனை[31]
ஒன்றும்[32] பொருள்கள் உரைப்பவர் ஆகிலும்
வென்று ஐம் புலனும் விரைந்து பிணக்கு அறுத்து
ஒன்றாய்[32] உணரும் ஒருவனும் ஆகுமே (2517)

பத முத்தி மூன்றும்[33] பழுது[34] என்று கை விட்டு
இதம் உற்ற[35] பாச இருளைத்[36] துரந்து
மதம் அற்று எனது யான் மாற்றிவிட்டு ஆங்கே
திதம்[37] உற்றவர்கள் பரை சித்தர்[38] தாமே (2525)

1 மூலாக்கினியை 2 பூரக கும்பகரேசகம் செய்து 3 உள்நிரப்பிட 4 வெள்ளிய சுக்கிலத்தை-நெஞ்சத்து வெளியை 5 குறிக்கோளை 6 தன்பதமாம் 7 அநாதியான பதங்கள் 9 அவனே இந்த இவனே அவன் 10 காலம் இடம் செய்தி 11 உடம்பு 12 காரணமளவாக நிற்கும் 13 அக்காரணமாயையும் கடந்த நிலையில் 14 ஆருயிர் 15 அருளோன் 16 அருள் 17 அருள்வெளிப் 18 நீண்டதால் 19 அடங்கி நிற்றல் 20 மாலருட்பாழ், மாயப்பாழ், மன்னுயிர்ப்பாழ் 21 காரிய உபாதிகள் 22 காரண உபாதிகள் 23 அழித்தல், படைத்தல், அறிதல், காரணமாதல், வியாபித்திருத்தல், எல்லாம் தான் ஆதல், காத்தல் 24 ஜீவனே 25 ஏதுவாகிய வாயில் 26 நீங்கா நினைவுடன் தொழுதல் 27 மனம் தல் வயப்படுத்தலுக்கு 28 அருள்வழி நிற்றலும் அவ்வருளினை மறவாமையும் 29 பொறி புலனடக்கலே 30 இயல்பாகவே பாசங்களின் நீங்கியதூயோனை 31 பொருந்தும் மெய்ப் 32 ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் என 33 சத்தியலோகம் வைகுந்தம் கயிலாயம் 34 மீண்டும் பிறப்பினுக்கு ஆளாக்குவன 35 சுட்டி புலனாகக்கூடிய மாயாகாரியப்பொருள் 36 ஆணவ வல்லிருள் 37 நிகைத்திருக்கும் தன்மை பிரம்மத்தை உணர்வில் உணர்ந்த

உதிக்கின்ற இந்திரன் அங்கி யமனும்
துதிக்கும் நிருதி வருணன்[2] நல் வாயு
மதிக்கும் குபேரன் வடதிசை ஈசன்[3] (2527)
நிதித்து[4] எண் திசையும் நிறைந்து நின்றாரே

ஊறும் அருவி யுயர்வரை யுச்சி[5] மேல்
ஆறு இன்றிப் பாயும்[6] அரும் குளம் ஒன்றுண்டு
சேறுஇன்றிப் பூத்த செழுங்கொடித் தாமரைப்[7]
பூவின்றிச் சூடான் புரி சடை யோனே (2535)

ஒன்றும்இரண்டும்[8] ஒருங்கிய[9] காலத்து
நின்றும் இருந்தும் நிலம்பல பேசினும்
வென்றும் [10] இருந்து விகிர்தனை நாடுவர்
சென்றும் இருந்தும் திருவுடை யோரே (2536)

நவமாம்[11] அவத்தை நனவாதி பற்றில்
பவமாம்[12] மலம் குணம் பற்றற்றுப் பற்றாத்
தவமான சத்திய ஞானப் பொதுவில்
துவமார்[13]துரியம் சொரூபம்[14] அது ஆமே (2538)

மாயை மறைக்க மறைந்த மறைப்பொருள்[15]
மாயை[16] மறைய வெளிப்படும் அப்பொருள்
மாயை மறைய மறைய வல்லார் கட்குக்
காயமும் இல்லை கருத்து[17] இல்லை தானே (2548)

திடர்[18] இடை நில்லாத நீர் போல ஆங்கே
உடல் இடை நில்லா உருபொருள்[19] காட்டிக்
கடல் இடை நில்லாக் கலம்[20] சேரு மாபோல்
அடல் எரி வண்ணனும் அங்கு[21] நின்றானே (2561)

விட்ட[22] இலக்கனை தான்[23] போம் வியோமத்துத்[24]
தொட்டு விடாதது உபசாந்தத்தே[25] தொகும்[26]
விட்டு விடாதது மேவும்[27] சத்தாதியில்[27]
சுட்டும் இலக்கணா அதீதம் சொரூபமே[28] (2565)

ஆறாறு அகன்ற[29] அணுத் தேசம் பதம் சுத்தம்
ஈறான தற்பதம் எய்தும் உபசாந்தத்து
பேறாகிய ஜீவன் நீங்கிப் பிரசாதத்து[30]
ஈறான தொந் தத் தசி[31] தத்துவமசியே (2569)

2 மழைக்கடவுள் 3 ஆண்டான் 4 காவல் புரியுமாறு 5 ஆஞ்ஞை-புருவநடு 6 நீர்நிரப்பும் 7 ஆயிரவிதழ் சகசிர அறை 8 மனம் மொழி மெய் முக்கரணங்கள் 9 தய் வயப்பட்டு ஒருங்கிய 10 புலனை அடக்கி 11 ஜீவன், சக்தி, பிரம்மம் ஆக மூன்றுக்கும் நனவு, கனவு, சுழுத்தி என ஆக ஒன்பது அவத்தைகள் 12 பிறப்புண்டாம் 13 மேன்மை பொருந்திய 14 இயற்கை உண்மை 15 பிரமம் 16 மருள் 17 பிரமத்தையன்றி சேரும் எந்நினைவும் 18 மேட்டின் 19 ஆன்மா 20 மரக்கலம் 21 உடலில் 22 ஒரு பொருளினது இலக்கனத்தை மற்றொரு பொருட்குத்தந்துரைப்பது விட்ட இலக்கினை 23 ஆருயிர் 24 அறிவுப்பெருவெளியுள் (போக்கு வரவு புணர்வுமிலாத உயிரை பேர்வது போல கூறியது விட்டதாம்) 25 உயிர் செயலற்றொடுங்குவதாகிய ஒழிவிலொடுக்கம 26 அடங்கும் (என்பது விடாதே) 27 கொள்ளுவது-ஓசையாதி செவியாதியில் மேவுதல் விட்டு விடாதது ஆருயிர் பொருள்களையோ புலனையோ பற்றுவதில்லை 28 மாறாஇயற்கை 29 தத்துறம் 36ம் உணர்ந்து பற்றகன்ற 30 குருவின் கருணையால் 31 நீ அது ஆகிறாய்.

திருமந்திரம்-தந்திரம்-8 தத்துவமசி, மகாவாக்கியம், விசுவன் வாய்மை, ஞானிசெயல்

பூரணி யாது[1] புறம்பு ஒன்று இலாமையின் [2576]
பேர் அனியாதது பேச்சு ஒன்றும் இலாமையில்
ஓர்[2] அனையாதது ஒன்றும் இலாமையில்
காரணம்[3] இன்றியே காட்டும்[4] தகைமைத்தே

நீ[5] அது[6] ஆனாய்[7] என நின்ற[8] பேருரை[9]
ஆயது[10] நான் ஆனேன் என்னச் சமைந்து அறச்
சேய[11] பரம் ஆகும் சீர் நந்தி பேர் அருள்
ஆய அதுவாய் அனந்த[12] ஆனந்தி ஆகுமே (2577)

அழிகின்ற சாயா[13] புருடனைப் போலக்
கழிகின்ற நீரில் குமிழியைக் காணில்
எழுகின்ற தீயிற் கர்ப்பூரத்தை ஒக்கப் [2587]
பொழிகின்ற இவ் உடல் போம்[14] அப் பரத்தே

எல்லாம்[15] அறியும் அறிவு தன்னை விட்டு
எல்லாம்[16] அறிந்தும் இலாபம் அங்கு இல்லை
எல்லாம் அறிந்த அறிவினை[17] நான் என்னில்
எல்லாம் அறிந்த இறை எனலாகுமே (2596)

மெய் கலந்தார் ஒடு மெய் கலந்தான், மிகப்
பொய் கலந்தார் உள் புகுதாப் புனிதனைக்
கைகலந்து[18] ஆவி எழும் பொழுது அண்ணலைக்
கை கலந்தாருக்கே கருத்து உறலாமே (2601)

உய்யும்[19] வகையால் உணர்வினால் ஏத்துமின்
மெய்யன் அரன்நெறி மேல்உண்டு திண்[20]ணெனப்
பொய் ஒன்றும் இன்றிப் புறம்[21] பொலிவார் நடு
ஐயனும் அங்கே அமர்ந்து நின்றானே (2606)

மனம் அது தானே[22] நினைய வல்லாருக்கு
இனம் எனக் கூறும் இருங்காயம்[23] ஏவல்
தனிவினிதல்[24] அதன்பால் தக்கன[25]செய்யில்
புனிதன் செயலாகும் போதப் புவிக்கே[26] (2609)

முன்னைவினை[27] வரின் முன் உண்டே[28] நீங்குவர்[29]
பின்னைவினைக்[30]கணார்[31]பேர்ந்தறப்[32] பார்பர்கள்
தன்னை அறிந்திடும் தத்துவ ஞானிகள்
நன்மையில் ஐம்புலன் நாடலினாலே (2610)

1 எல்லாவற்றையும் உள்ளடக்கி புது நிறைவோ புது வளர்ச்சியே கொள்ளாதது 2 ஒன்றை 3 தனக்குமேல் ஒரு காரணம் 4 வெளிப்படும 5 துவம் 6 தத் 7 அஸி 8 சமஸ்கிருத 9 மாவாக்கியம் 10 பரமாத்மா 11 எட்டாமலிருந்த 12 முடிவிலா 13 நிழல் உச்சிக்காலத்து புறத்துப்புலனாவதில்லை 14 சூக்கும நுண்மயமாய் கலக்கும் 15 உலகப்பொருள்கள் 16 அறிவு நூல் பொருள்கள் 17 பரம்பொருள் 18 பயிற்சி மிகுதியால் வெளியே மேவுங்காலை 19 நன்னெறி நான்மை சிறப்புற்று உய்யும் 20 உறுதிப்பாட்டுடன் 21 அகப்பொவிவொத்துப்புறத்தும் 22 பயிற்சி மிகுதியால் மாறாது தனக்குத்தானே 23 தூய சரீரமே 24 தனிதிருந்து 25 உள்ளக்குழியின் உருவெழுதி பரத்தின்பால் ஒப்புவித்தல் 26 ஞானபூமிக்கே 27 ஊழ்வினை 28 பிரம்மத்தை இடைய நினைத்தே 29 உள்ளம் புகாமல் தீவினைப்பயன் நெருங்க அஞ்சி செயலற்று அழியும் (மார்க்கண்டேயர் கண்ணப்பர்) 30 இப்பிறப்பில் செய்யும் ஏறுவினை(ஆகாம்யம்] 31 நான் எனது எனும் பந்தபாச தீவினை செம்யார் 32 கன்மத்தை விட்டுஇருக்க

திருமந்திரம்-தந்திரம்-8-ஞானச்செயல், அவாவறுத்தல், பக்தியுடைமை

தன்னை அறிந்திடும் தத்துவ ஞானிகள்
முன்னை வினையின் முடிச்சை[1] அவிழ்ப்பர்கள்[2]
பின்னை வினையைப்[3] பிடுத்துப் பிசைவர்கள்[4]
சென்னியில் வைத்த பரைஅருளாலே (2611)

மனம் வாக்குக் காயத்தால் வல்வினை[6] மூளும்
மனம் வாக்கு நேர்நிற்கில்[7] வல்வினை மன்னா[8]
மனம் வாக்குக் கெட்டவர் வாதனைதன்னால்[9]
தன்னைமாற்றி[10] ஆற்றத் தகு ஞானி தானே (2612)

ஆசை அறுமின்கள் ஆசை அறுமின்கள்
ஈசனோடுஆயினும்[11] ஆசை அறுமின்கள்
ஆசைப் படப்பட ஆய் வரும் துன்பங்கள்
ஆசை விடவிட ஆனந்தம் ஆமே (2615)

உண்மை உணர்ந்து உற[13] ஒண்[14] சித்தி முத்தி ஆம்
பெண் மயல் கெட்டு அற பேர்அட்ட சித்திஆம் 2619
திண்மை[15]யின் ஞானி பரைகாயம்[16] கைவிட்டால்
வண்மை[17] அருள் தான் அடைந்த அன்பில் ஆறுமே

முத்திசெய் ஞானமும் கேள்வியுமாய் நிற்கும்
அத்தனை மாயா அமரர் பிரான் தனைச்
சுத்தனைத் தூய் நெறியாய் நின்ற ஜோதியைப்
பத்தர் பரசும்[21] பசுபதி தான் என்றே (2623)

ஆன் கன்று தேடி அழைக்கும் அதுபோல் [2627]
நான் கன்றாய் நாடி அழைத்தேன் என் நாதனை
வான் கன்றுக்கு அப்பாலாய் நின்ற மறைப்பொருள்
ஊன் கன்றான்[22] ஆடி வந்து உள் புகுந்தானே

பெத்தத்துத்[23] தன் பணி இல்லை பிறந்தலான்[24]
முத்தத்துத் தன் பணி இல்லை முறைமையால்
அத்தற்கு இரண்டும்[26] அருளால் அளித்தலால் 2628
பத்திப் பட்டோர்க்குப் பணி ஒன்றும் இல்லையே

நிலைபெறு[27]கேடுஎன்று [8] முன்னே படைத்த
தலைவனை நாடி தயங்கும்[29] என் உள்ளம் [2632]
மலை உள்ளும் வான் அகத்து உள்ளும் புறத்தும்[30]
உலை[31] உள்ளும் உள்ளத்து மூழ்கி நின்றேனே

1 சஞ்சிதம்-எஞ்சுவினை 2 வறுத்த வித்துபோல பயனளிக்காததாக்குவர் 3 ஆகாமியம்-ஏறுவினையை 4 உருவுற்றெழாவண்ணம் உருக்குலைவிப்பர் 6 பாவப்பயனாகிய பிறப்பு 7 நன்னெறியில் நின்றால் 8 வாதனைபொருந்தா 9 அகத்தவப்பயிற்சியினால் அட்டாங்கயோகத்தால் 10 தற்போதத்தை அழித்து ஒழிக்க 11 நோயாளி மருத்துவன்பாலும் கற்பார் கற்பிப்பார்பாலும் ஆணையிடுவது பிழையாகுமாபோல் ஆண்டவனோடாயினும் 13 நன்னெறியில் செல்ல 14 அறிவொளிச் செறிவாய் நிற்கும் 15' வைராக்கியம் 16 தான் ஒடுங்கி நிற்கும் பரதுரியம் 17 வளம்மிக்க 18 அமரும் 21 போற்றிப் புகழப்படும் 22 ஒழுகும் தவத்தின்கண் 23 கட்டுநிலையில் தன்முனைப்பற்று 24 திருவாணை அறிவிற்றோன்றுதலால் 25 அறிவு அன்பு ஆற்றல் 26 ஜீவ போதம் பரபோதம் 27 இத்தனை காலம் இருக்க 28 காரணத்தின் கண் உறுக அழிக என 29 கலங்கும் 30 சார்பு வடிவு-நீங்குநிலை 31 உறைவிடம்- நீங்கா சொரூபம்.

காலினில்[1] ஊறும்[2] கரும்பினில் கட்டியும்
பாலினுல் நெய்யும் பழத்துள் இரதமும்[3]
பூவினுள் நாற்றமும்[4] போல் உளன் எம்இறை
காவலன் எங்கும்[5] கலந்து நின்றானே (2639)

அந்தக் கருவை[6] அருவை[7] வினை செய்தல்
பந்தம் பணி அச்சம் பல் பிறப்பும் வாட்டிச்
சிந்தை திருத்தலும் சேர்ந்தாரச் சோதனை
சந்திக்கத் தற்பரம் ஆகும் சதுரர்க்கே[9] (2647)

மாயை இரண்டு[1] மறைக்க மறைவு உறும்
காயம் ஓர் ஐத்தும்[11] கழியத் தானாகியே
தூய பரஞ்சுடர் தோன்றச் சொரூபத்து உள்
ஆய்பவர் ஞானாதி மோனத்தர்[13] ஆமே (2655)

கருடன் உருவம்[14] கருதும் அளவில்
பரு விடம் தீர்ந்து பயம் கெடுமாறு போல்
குருவின் உருவம் குறித்த அப்போதே
திரி மலம் தீர்ந்து பரம் அவன் ஆமே (2659)

தான் ஆன வண்ணமும் கோசமும் சார்தரும்
தான் ஆம் பறவை[17] வனம்[18] எனத் தக்கன (2664)
தான் ஆன சோடச[19] மார்க்கந்தான்[20] நின்றிடில்
தான் ஆம் தச அங்கமும்[21] வேறு உள்ள தானே

தூலப் பிரணவம்[22] சொரூப ஆனந்தப் பேர்உரை
பாவித்த சூக்கும மேலைச் சொரூபப் பெண்
ஆவித்த முத்திரை யாம் கதிர் காரணம்
மேலைப் பிரணவம் வேதாந்த வீதியே (2675)

ஒளியை[23] அறியில் உருவும் ஒளியும்[24]
ஒளியும்[25] உருவம் அறியில்[26] உருவாம்
ஒளியின்[27] உருவம் அறியில் ஒளியே
ஒளியும்[29] உருக உடன்[30] இருந்தானே (2681)

மின்னிய தூவொளி[31] மேதக்க செவ்வொளி[32]
பன்னிய[33] ஞானம் பரந்த பரத்து ஒளி
துன்னிய[34] வாறு ஒளி தூய்மொழி[35] நாடோறும்
உன்னியவாறு ஒளி ஒத்தத்து தானே (2686)

1 காற்றினில் 2 பரிசமும் 3 ரசச்சுவையும் 4 மணமும் 5 அகல் அமை அடங்கு நிறைகளாக 6 வித்தாகிய இருள் மலத்தை 7காரண மாயா காரியங்களை 9 பெரியர் தீரர்க்கே 10 மூலப்பிரகிருதி அவித்தை 11 பருவுடல் நுண்ணுடல் குணவுடல் போர்வையுடல் மீதூண்உடல்-உணவுடல்காற்றுடல் மனவுடல் அறிவுடல் இன்பவுடல் (பஞ்சகோசம்) 13மாயா பிரஞ்ச காரியங்களுளில் தன் ஆத்ம சொரூபத்தை காண்பவர் 14.ஆதிபௌதிக் ஆதி தெய்வீக ஆத்தியான்மிகமாக பாவித்து 17ஜீவன் 18 தத்துவக்கூட்டம் 19பதினாறு 20 சீலத்தில் நோன்பில், செறிவில், அறிவில் X சீலம நோன்பு செறிவு அறிவு (4X4=16) 21 உடலில் ஆருயிரில் பரத்தில் உருவம் தரிசனம் சுத்தி [+1] 22 ஓம்மொழி-தன்னை சுற்றிலும், தனக்கு மட்டும் உள்ளத்தில் உயிரில் எனவாம் 23 ஆன்மாவை 24 மறையும் 25ஒடுங்கி மறைத்து போகும் 26 நாடிடில் மீண்டும் பிறப்பு 27அறிவொளித்தன்மையின் 28 பரஒளி உதயமாகும் 29 ஆருயிரின் பத்தபாசம் களைய பரன்பால் 30பிரம்மானந்தமுடன் 31 பிரமத்தின் அறிவு 32 பரையின ஆற்றல் 33 புகழப்படும் 34 நன்னெறி நெருக்கமாகிய 35 மறைமொழி

ஆனந்தம் ஆட அரங்கம் ஆனந்தம் பாடல்கள்[2]
ஆனந்தம் பல்லியம்[3] ஆனந்த வாச்சியம்[4]
ஆனந்த மாக அகில சரா அரம்
ஆனந்தம் ஆனந்தக் கூத்து உகந்தானுக்கே (2725)

வேதங்கள்[5] ஆட[6] மிகு ஆகமம்[7] ஆடக்
கீதங்கள்[8] ஆடக் கிளர்[9] அண்டம் ஏழு[10] ஆடப்
பூதங்கள் ஆடப் புவனம் முழுது[12] ஆட (2729)
நாதம்[13] கொண்டு ஆடினான் ஞான ஆனந்தக்கூத்தே

பரம அண்டத்து ஊடே பராசக்தி பாதம்
பரம அண்டத்து ஊடே படர்ஒளி ஈசன்[16]
பரம அண்டத்து ஊடே படர்தரு நாதம்[17]
பரம அண்டத்து ஊடே பரன் நட மாடுமே (2734)

அடங்காத[18] என்னை அடக்கி அடிவைத்து[19] (2741)
இடங்காண்[20] பரானந்தத்தே என்னை இட்டு
நடந்ததான்[21] செய்யும் நந்தி[22] நன்ஞானக் கூத்தன்
படந்தான்[23] செய்துஉள்[24] உள் படிந்திருந்தானே

தேட்டஅறும்[25] சிந்தை திகைப்பு[26] அறும் பிண்டத்துள்
வாட்டம் அறும் கால்[28] புத்தியாகி[29] வரும் புலன்
ஓட்டம்[30] அறும் ஆசை அறும் உள்ளத்து ஆனந்த
நாட்டம் முறுக்குறு[31] நாடகம்[32] காணவே (2745)

வளி மேகம் மின் வில்லு[33] வானக ஓசை
தெளிய[34] விசும்பில் திகழ் தருவாறு போல் (2765)
களி[35] ஒளி ஆறும்[36] கலந்து உடன் வேறாய்
ஒளி உருவாகி ஒளித்து நின்றானே

சக்தி வடிவு சகல ஆனந்தமும்
ஒத்த[37] ஆனந்தம் உமையவள் மேனியாம்
சத்தி வடிவு சகளத்து எழுந்து இரண்டு[38]
ஒத்த ஆனந்தம் ஒரு நடம் ஆகுமே (2769)

நெற்றிக்கு நேரே புருவத்து இடைவெளி
உற்றுஉற்றுப் பார்க்க ஒளிவிடு மந்திரம்
பற்றுக்குப் பற்றாய் பரமன் இருந்திடஞ்
சிற்றம்பலம் என்று தேர்ந்து கொண்டேனே (2770)

2 ஆத்மீக ஞானப்பாடல்கள் இசைக்கொட்டுக்கருவிகள் 4 நிலைத்தினை இயங்குதினை எல்லாமும் அபிநயம் 5 வாழ்க்கை நெறிநூல் 6 பயன்கொள்ள தொழிற்பட 7 இறைவழிப்பாட்டு ஒழுக்கதுறைநூல் 8 பண் நாற்கள் 9 விளக்கம் மிகச்சொல்லப் படும் 10 பூபுவ:சுவ:மஹ:ஜன:தப:ஸத்ய: 12 அண்டசராசரம் 224ம் 13 முப்பத்தாறுமெய்நாத தத்துவங்கள் 16 தேவர்களின் காரண சமஷ்டி ஆண்டவன் 17 ஓசைமெய் 18 பொறி புலன் அடங்கி நன்னெறிகண் செல்லாத 19 திருவடிசூட்டி 20 அடங்கி யொழுகுமாறுசெய்து 21 திருக்கூத்து 22 மெய்குரு 23 உயிர் ஓவியம் போன்று அசைவறநிஸ்டை 24 உணர்வின் 25 புறம் சென்று தேடும் ஆசைகெடும 26 ஆமோ அன்றோஎன ஐயம் 28 உயிர்ப்பு-பிராண வாயு 29 லயமாகி 30 மன சஞ்சலம் அலைவு 31 முதிரும் வளரும் 32 திருவிளையாடல் 33 வானவில் 34 இடம் கொடுப்பினும் இவற்றால் தொடக்குண்ணாது தனித்து திகழ 35 களிப்பினை தரும் 36 அகநிலை ஆறினும் அருள் விளக்கவொளி-ஓரறிவு முதல் ஆறறிவு ஈறாக அறிவொளி-ஆறுசமய பொருள்முடிவு 37 உண்மைஅறிவு இன்பம என தனக்குத்தானே ஒத்தாய் 38 பிரமம் பரை ஆற்றல்

அண்டத்தில் தேவர்கள் அப்பாலைத் தேவர்கள்
தெண்டிரை சூழ் புவிக்கு உள் உள்ள தேவர்கள்
புண்டரீகப்[1] பதப்[2] பொன்னம்பலக் கூத்துக்
கண்டு சேவித்துக் கதி பெறுவார்களே (2777)

புளிக்[3] கண்டவர்க்குப் புனல் ஊறுமா போல் (2778)
களிக்குந் திருக் கூத்துக் கண்டவர்க்கு எல்லாம்
துளிக்கும் அருள் கண்ணீர் சோர்[4] நெஞ்சு உருக்கும்
ஒளிக்குள் ஆனந்தத்து அமுது ஊறும் உள்ளத்தே

சிவமாதி ஐவர்[5] திண்டாட்டமும்[6] தீரத்
தவமார் பசுபாசம் ஆங்கே தனித்துத்[7] (2792)
தவமாம்[8] பரன் எங்கும் தானாக ஆடும்
தவமாம்[8] பரை ஆனந்தத்து ஓர் ஞானக்கூத்தே

நா தத்துவம் கடந்து ஆதி[9] மறை நம்பி
பூ தத்துவத்தே பொலிந்து இன்பம் எய்தினர்
நே தத்துவமும்[10] அவற்றோடு நேதியும்[11]
பேதப் படா வண்ணம் பின்னி[12] நின்றானே (2795)

தான் ஆன சத்தியும் தற்பரையாய்[13] நிற்கும்
தான் ஆம் பரற்கும் உயிர்க்கும் தகும் இச்சை
ஞானாதி பேத நடத்து[15] நடித்து அருள் (2803)
ஆனால் பரன் அடி நேயத்து[16] ஆகுமே

அண்ட[17]ஒளியும் அகண்ட[18] ஒளியுடன்
பிண்ட[19] ஒளியால் பிதற்றும் பெருமையை (2806)
உண்டவெளிக்குள்[20] ஒளிக்குள்[21] ஒளித்தது
கொண்டகுறியைக்[22] குலைத்தது தானே

புறத்து[23] உள்ள ஆகாசம் புவனம் உலகம் (2812)
அகத்து உள்ள ஆகாசம் எம்ஆதி[24] அறிவு
பரத்து உள்ள ஆகாசம் செழும் சுடர்ச்ஜோதி
சகத்து உள்ள ஆகாசத்தின் தானம்[26] சமாதியே

ஓடும்[27] இருக்கும் கிடக்கும் உடன் எழும் (3099)
ஆடும் பறக்கும் அகண்டமும்[28] பேசிடும்
பாடும் புறத்து எழும் பல்உயிர் ஆனந்தம்
கூடும் பொழுதிற குறிப்பிவை தானே

1 செந்தாமரைமலர்ப் 2 முழுமுதற் பிரமம் 3 புளியம்பழம் 4 துளித்து முத்துமுத்தாக வடியும் 5 பிரமம் வனப்பாற்றல் அருளோன் ஈசுவரம் சுத்தவித்தை அருளல் மறைத்தல் அழித்தல் காத்தல் ஆக்கல் 6 உலகநோக்கிய உழைப்பு 7 ஒட்டாதுவிட்டு நிற்கும் 8 தவவுருவாக 9 ஆதியாகிய அம்மை 10 தத்துவநீக்கச் சுத்தியும் 11 பிரிப்பதும்-அன்று அன்று என விலக்குவதும் 12 வேற்றப் புணர்ந்து 13 மரமும் அதன் காழ்ப்புமாய்-வைரமும் ஒளியுமாய் பிரிவின்றி 14 தொழிலறிவு விழைவு 15 உணர்த்தி நடத்தும் 16 அன்புப்பொருள் 17 சூரிம 18 எல்லாவற்றுக்கும் ஒளி கொடுத்தொளிரும் பிரம்ம 19 ஆருயிர் ஜீவ அறிவுஒளி 20 ஆருயிரின் ஜீவ ஒளியை சூரியனின் ஒளி விளங்கிற்று 21 சூரிய ஒளியும் பிரம்ம பேரொளிக்குள் 22 சரீர அமைப்புக்கட்டுநிலையை 23 பூதவெளி 224ம் 24 வனப்பாற்றல் 25 இயற்கை அறிவொளி வடிவம் 26 நிஷ்டை கூடும் இடம் 27 உயிர் செயல்கள் ஓடும் லைபின்றிப்பரந்த உலகங்களின் செய்திகளை ஒன்றொழியாமல்

விளக்கைப்பிளந்து[1] விளக்கினை[2] ஏற்றி
விளக்கினுக்குள்ளே[3] விளக்கினைத்[4] தூண்டி
விளக்கில்[5] விளக்கை[6] விளக்க வல்லார்க்கு [2816]
விளக்குஉடையான்[7] கழல் மேவலும் ஆமே

நான்[3] என்றும் தான்[9]என்றும் நாடினேன்[10]நாடலும்
நான் என்றும்தான் என்றும்இரண்டு இல்லே என்பது
நான் என்ற ஞான முதல்வனே நல்கினான் [2820]
நான் என்று நானும் நினைப்பு ஒழிந்தேனே

ஞானத்தின் நன்னெறி நாதாந்த[14] நன்னெறி
ஞானத்தின் நன்னெறி நான் என்ற அறிவோர்தல்
ஞானத்தின் நல் யோக நன்னிலையே நிற்றல் 2821
ஞானத்தின் நன்மோன[15] நாதாந்த வேதாந்தமே

ஓம் எனும் ஓர் எழுத்துஉள் நின்ற ஓசைபோல்
மேல் நின்ற தேவர் விரும்பும் விழுப்பொருள் (2824)
சேய்[16] நின்ற செஞ்சுடர் எம்பெருமான் அடி
ஆய்[17] நின்ற தேவர் அகம்படி[18] யாகுமே

எப்பாழும்[19] பாழும்[20] இயாவுமாய்[21] அன்றாகி
முப் பாழும்[22] கீழ்உள முப்பாழும்[23] முன்னியே[24]
இப் பாழும் இன்னவாறு என்பதிலா இன்பத்து
தற் பரஞான ஆனந்தம் தான்அது[25] ஆகுமே (2825)

உருவுள்[26] பலநிறம் ஒண் மணம் சோபை [2829]
தர நிற்ப[27] போல் உயிர் தற்பரம் தன்னின்[29]
மருவப் பரை என்ற மாமூப்பதத்தின்[29]
சொரூபம் தன் சக்தியாய் தோன்ற நின்றானே

பாலோடு தேனும் பழத்துள் இரதமும்
வாலிய பேர் அமுதாகும் மதுரமும் [2831]
போலும் துரியம் பொடிபட உள்புகச்
சீல மயிர்க்கால் தோறும் தேக்கிடுமே[30]

மத்திமம்[31] ஆறாறு[32] மாற்றி[33] மல நீக்கிச் [2833]
சுத்தம் அதுஆகும் துரியத் துரிசற்றுப்[34]
பெத்தமறப்[35] பரமாகிப் பிறழ்வுற்றுச்
சத்திய ஞான ஆனந்தம் சார்ந்தனன் ஞானியே

1 தத்துவங்களினின்றும் ஆன்மீக ஒளியை பிரித்துக்காட்டுவதும் காண்பதும் 2 பரவொளியை பரவும்படி உள்ளத்துள் 3 பிரம்ம ஒளிக்குள் 4 ஜீவ ஒளியை மறவாது நினைத்து 5 பரமாத்மாவில் 6 ஜீவாத்மாவை 7ஒளிக்கெல்லாம் ஒளியாயுள்ளவன் 8 ஆருயிராகிய அடியேன் வேறு 9 பேருயிராகிய பிரமம் வேறு 10நடப்பாற்றல் வழி நாடினேன் 14அறிவிற்செறிவாம் ஞானயோக 15 மேன்மையுணர்வாம் 16மனம் வாக்குகளுக்கு எட்டாமல் 17 ஆராய்ந்து அன்புபூண்டு 18 மனத்தின் தன்மைபடி 19 மாயை சம்பந்தமான உடல்மெய் உணர்வுமெய் உணர்த்துமெய் ஜீவதுரியம் பரைதுரியம் பரதுரியம் 20 காரணமாயை 21 மாயை சம்பந்தமற்றவையும் 22 பரதுரியத்தல் நனவு கனவு உறக்கம் 23பூமியிலுள்ள மண் பெண் பொன் ஆகியவை 24 கடந்து 25 முழுமுதலாய் 27 நீலோற்பல மலரில் நிறம் மனம் அழகு சிறப்பு தூய்மை 28 எனபெருங்குணங்களும் பதிந்து விளங்கி 29 ஜீவன் பேரருள் பெருமான் 30நிறைந்து நின்று குறையிலா இன்பத்தை அருளுமே 31உண்ணிலைக்கருவிகள் 32தத்துவங்கள் 33 ஜீவனது அல்ல பிரம்மத்தினது எனஉணர்ந்து கைகொண்டு ஒழுகி 34 தூவாமை கட்டு நீங்கி 35பந்தம் பாசம் கட்டு நீங்க

சமையச் சுவடுந்[1] தனை அறியாமல்
கமை[2] அற்ற காமாதி காரணம் எட்டும்[3]
திமிரச்[4] செயலும் தெளிவுடன் நின்றோர்
அமரர்க்கு அதிபதி யாகி நிற்பாரே (2838)

உருவன்றியே நின்று உருவம்[5] புணர்க்கும்
கரு[6] வன்றியே நின்று தான் கருவாகும்[7]
அருவன்றியே நின்ற மாயப் பிரானைக்
குருவன்றி யாவர்க்கும் கூட ஒண்ணாதே (2840)

உரையற்ற ஆனந்த மோன சொருபத்தன்
கரையற்ற சத்தியாதி காணில் அகார
மருவுற்ற[7] உகார மகாரம் அதாக
உரையற்ற தாரத்தில்[8] உள்ஒளி யாமே (2844)

தான்முன்னம்செய்த விதிவழி தான் அல்லால்
வான்[11] முன்னம் செய்தங்கு வைத்ததோர்மாட்டில்லை[12]
கோன் முன்னம்[13] சென்னிகுறிவழியே[14] சென்று
நான் முன்னம் செய்ததே நன்னிலம் ஆனதே (2844)

வான்நின்று இடிக்கில்[15]என் மாகடல்பொங்கில்[16]என்
கானநின்ற செந் தீக் கலந்து உடன் வேகில் என்
தான் ஒன்றி மாருதம் சண்டம் அடிக்கில் என்
நான் ஒன்றி[17] நாதனை நயடுவேன் நானே (2850)

ஆனை துரக்கில் என் அம்புடு[19] அறுக்கில் என்
கானத்து உழுவை[20] கலந்து வளைக்கில் என்
ஏனைப்[21] பதியினில் எம்பெருமான வைத்த
ஞானத்து உழவினை[22] நான் உழுவேனே[23] (2851)

சிந்தயது என்னப் பரன் என்ன வேறில்லை
சிந்தையின் உள்ளே பரனும் வெளிப்படும்
சிந்தை தெளியத் தெளிய வல்லார் களுக்குச்
சிந்தையின் உள்ளே பரன் இருந்தானே (2853)

வாக்கு மனமு மறைந்த[24] மறைப் பொருள் (2854)
நோக்குமின் நோக்கப்படும் பொருள் நுண்ணிது
போக்கு ஒன்றுக் இல்லை வரவுஇல்லை கேடுஇல்லை[25]
ஆக்கமும்[26] அத்தனை ஆய்ந்து[27] கொள்வார்க்கே

1 குறிகள் 2 பொறுமை 3சருக்கு சினம் சிறுமை இவறன்மை மான் பிறந்தமானம் மாணா உவகை மண் பொன் எண்டன 4 ஆவை வல்லிருள் 5 முதலுடம்பு மீநுண்ணுடம்பு குண உடம்பு நுண்ணுடம்பு பருவுடம்பு என ஐவகை 6 தனக்கொரு காரணமின்றி 7 அவற்றோடு கூடும் 8 ஓமொழி-பிரணவம் 11 மேன்மைமிக்க ஈசுரன் 12 சம்பந்தமில்லை 13 பிரம்ம சந்நிதானத்தில் 14 உச்சித்துளை வழியே 15 பேரிடி முழங்கினால் 16பெருவெள்ளஊழி நேர்ந்தால் 17ஒருமுகப்பட்டு19 கூர்ங்கணை நெஞ்சூடுஊடுருவி 20 புலி 21 ஞானப் 22 நூல்களை ஆராய்ந்து ஓதல் ஓதுவித்தல் 23 தொண்டினை ஆற்றுவேனே 24 கழியநின்ற 25 பிறப்பும் இறப்புமில்லை 26 பிறவிப்பயன் 27 கேட்டல் சிந்தித்தல் தெளிதல் நிட்டை கிளைத்தல்

உணர்வும் அவனே உயிரும் அவனே
புணர்வும் அவனே புலவி அவனே
இணரும்[2] அவன் தன்னை எண்ணலும் ஆகான்
துணரின் மலர்க் கந்தம் துன்னி[4] நின்றானே (2587)

சத்திய ஞானத் தனிப்பொருள் ஆனந்தம்
சித்தத்தின் நில்லாப் பரை ஆனந்தப் பேரொளி
சுத்தப் பிரமதுரியத் துரியத்துஉள்
உய்த்த துரியத்து உறு பேரொளியே[8] (2860)

முத்தியும் சித்தியும் முற்றிய ஞானத்தோன்
பத்தியுள் நின்று பரம்தன் உள் நின்றுமா[12]
சத்தியுள் நின்றோர்க்குத் தத்துவம்[13] கூடலாற்
சுத்திஅகன்றோர்[14] சுகானந்த போதரே (2862)

துரிய்[15] அதீதம்[16] சொல்அறும் பாழாம்[18]
அரிய துரியம் அதீதம் புரியில்
விரியும்[20] குவியும்[21] விள்ளா[22] மிளிருந்[23] தன்[24]
உருவும் திரியும் உரைப்பது எவ்வாறே (2863)

பற்றற்றவர் பற்றி நின்ற பரம் பொருள்
கற்றற்றவர்[25] கற்றுக் கருதிய கண்ணுதல்[26]
சுற்றற்றவர் சுற்றி நின்ற என் ஜோதியைப்
பெற்று உற்றவர்கள் பிதற்று ஒழிந்தாரே (2864)

ஏற்றம்இரண்டு[27] உள ஏழு துரவு[28]உள
மூத்தான[29] இறைக்க இனையான்[30] படுத்தநீர்[31]
பாத்தியில் பாயாது பாழ்ப்பாய்ந்து[32] போயிடில்
கூத்தி வளர்த்த ஓர் கோழிப்புள்[33] ஆமே (2873)

பார்ப்பான் அகத்திலே பாற்பசு[35] ஐந்து உண்டு
மேய்ப்பாரும்[36] இன்றி வெறித்துத்[37] திரிவன
மேய்ப்பாரும் உண்டாய் வெறியும் அடங்கினால்
பார்ப்பான் பசு ஐந்தும் பாலாச்[38] சொறியுமே (2883)

ஆமாக்கள்[39] ஐந்தும் அரியேறு[40] முப்பதும்[41]
தேமா[42] இரண்டோடு திப்பிலி[43] ஒன்பதும்
தாமாக்[44] குரங்கொளிற் தம் மனத்து உள்ளன
மூவாக்[47] கடாவிடின்[49] மூட்டு[50] கின்றாரே (2884)

2இதயத்துள் கலந்திருக்கும் 4 கூறுவதற்கு எண்ணவும் ஆகாதவாறு செயலறப் 8 அருளோன் 12 உன்னதமான திருவருள் 13 மெய்யறிவு 14 பொருள் அருள் தூய்மை எனும் சுத்தாவத்தையைக் கடந்து சென்றவர் 15 செயலறல் 16 நினைவு அறல் 18 வேறுபாடு இன்றிம் இத்தன்மை என்று எவராலும் சொலவொண்ணதது உயிர்படங்கல் 20 நினைப்பும் 21 மறப்பும் 22 உண்டாகா 23சுட்டறிவும் பேரறிவும் திரிந்து விளங்கும் 24அவ்வுயிரை தானாக்கி அருள்வான் 25 கற்று அறிந்து அடங்கினவர் 26 கருதுதல் எல்லாம் ஆக்குதல் 27 இடகலை பிங்கலை நாடிகள் 28 ஆதாரமாறும் சகஸ்ரயரை உச்சித்துளையும் 29 இடப்பால் 30 வலப்பால் 31தடுத்தலாகிய கும்பகம் செய்யாவிடில் 32வீணாக 33தனக்கும் வீட்டிற்கும் நாட்டிற்கும் பயன்படாதவர் 35 அறிபுல 36 திருவருள் 37 உலகியற் புலன்களில் ஈர்த்து 38 ஆனந்தமயமாய் 39பிராணன் 40வாயுக்கள் இந்திரியங்கள்10 சித்தம் மனம்புத்தி 41 மூன்றும் பத்தும் (13) 42 சுகம் துக்கம் 43 நற்செயலாற்றல் 44 நமக்குரியவனாக 48 வைராக்கியம் 49 கைவிட்டால் 50 அறுபகையும் மூளச்செய்

காடு[1] புக்கார் இனிக் காணார் கடுவெளி[2]
கூடு[3] புக்கானது ஐந்து குதிரையும்[4]
மூடுபுக்கானது[5] ஆறுஉளஒட்டகம்[6]
மூடு புகா[8] விடின்[9] மூவணை[10] யாமே (2893)

அக்கரை[11] நின்றது ஓர் ஆலமரம்[12] கண்டு
நக்கரை[13] வாழ்த்தி நடுவே[14] பயன் கொள்வர்
மிக்கவர் ஐந்து துயரமும்[15] கண்டு போய்த்
தக்கவர் தாழ்ந்து கிடக்கின்ற வாறே (2899)

கொட்டியும்[17] ஆம்பலும்[18] பூத்த குளத்திடை[19]
எட்டியும்[20] வேம்பும்[21] இனியது ஓர் வாழையும்[22]
கட்டியும்[23] தேனும்[24] கலந்து உண்ணமாட்டாதார்
எட்டிப்பழத்துக்கு இழைக்கின்ற வாறே (2901)

ஆறு[25] பறவைகள்[26] ஐந்து அகத்து உள்ளன
நூறுபறவை[29] நுனிக் கொம்பின்[30] மேலன
ஏறும் பெரும்பதிஏழும்[31] கடந்த பின்
மாறுதல் இன்றி மனை புகலாமே (2905)

கயல்ஒன்று[32] கண்டவர் கண்டே இருப்பர்
முயல்ஒன்று[33] கண்டவர் மூவரும்[34] உய்வர்
பறை ஒன்று பூசல் பிடிப்பான்[36] ஒருவன்
மறை ஒன்று கண்ட துருவம்[37] பொன் ஆமே (2910)

பதுங்கிலும் பாய்புலி[38] பன்னிரு காதம்
ஒதுங்கிய தண்[39] கடல் ஓதம் உலவ (2914)
மதுங்கிய வார் களி ஆர் அமுது ஊறப்
பொதுங்கிய[40] ஐவரைப்[41] போய் வளைத்தானே

வாழையும்[42] சூரையும்[43] வந்து இடம் கொண்டன
வாழைக்குச் சூரை வலிது வலிது என்பர்
வாழையும் சூரையும் வன்துண்டம்[46] செய்திட்டு
வாழை[47]யிடம் கொண்டு வாழ்கின்ற வாறே (2922)

குடை[48] விட்டுப் போந்தது[49] கோயில் எருமை[50]
படை[51] கண்டு மீண்டது பாதிவழியில்[52]
உடையவன்மந்திரி[53] உள்ளலும்[54] ஊரார்[55]
அடையார்நெடுங்கடை[56] ஐந்தோடு நான்கே [2925]

1 மாயையின் பேரொடுக்கம் 2 பாழ்சூன்யம் 3 உடலின்கண் 4 ஞானேந்திரியங்களும் 5 அடங்கி ஒழிந்தது 6 செருக்கு சினம் சிறுமை இறலறல் மாண்பிறந்தமானம் மனாவுவகை-காமம் குரோதம் உலோபம் மோகம் மதம் மாற்சரியம் 7 அடக்கி 8ஒழிந்து 9 ஒழுகினால் 10 ஆருயிர் அருள் அருளோன்செயலறல் 11 திருவடிப்பேறு 12 ஆல் அமர் அமீ பரம்பொருள் 13 அருளாளரை 14 நடுநிலையுடன் 15 அவித்தை செருக்கு இராகம் துவேஷம் சினம் 17 புணர்வும் 18 புலம்பும் 19 ஆருயிரின்கண் 20 பெயரும் 21 வடிவமும் 22 உண்மை 23 அறிவு 24 இன்பு ஆனந்தம் 25 அறுபகை 26 செருக்கு சினம் இறவறல் மாண்பிறந்த மானம் மனாவுவகை29எண்ணங்கள் 30எழுச்சியின்31புலம்பு புணர்வு நனவு உறக்கம் வேறக்கம்உயிர்ப்பபறுடங்கல் 32பிறமும் உலகியல்பு 33 வனப்பாற்றல் 34 சிலம் நோன்பு செறிவு 36 சமயக்கணக்கர் 37 அசையாநிலை 38 பிராணன் 39 பிரம்மானந்த 40 வருத்திய 41 பொறிபுலன் 42 இன்பமும் 43துன்பமும் 46 ஒப்பநோக்கி 47 வாழ்ஐ-பிரமம் 48 ஆசை 49பிரமத்திடம் சென்றது 50 எண்ணக் கிளர்ச்சி 51 அறுபகை 52அப்பியாசத்தின் நடுவில் 53 புத்தி 54 நினைக்கவே 55 ஜீவனார் 56பிறப்பு

தோணி[1] ஒன்று உண்டு துறையில்[2] விடுவது
ஆணி[3] மிதித்து நின்று ஐவர்[4] கோல் ஊன்றலும்
வாணிபம்செய்வார்[5] வழியிடை ஆற்றிடை
ஆணிகலங்கில்[6] அது[7] இது[8] ஆகுமே (2935)

காட்டும் குறியும் கடந்தவர்[9] காரணம்[10]
ஏட்டின் புறத்தில் எழுதி வைத்து என் பயன்
கூட்டும் குருநந்தி கூட்டிடின் அல்லது
ஆட்டின் கழுத்தில்[11] அதர் கிடந் தற்றே (2937)

உருவிலி ஊனிலி ஊனம் ஒன்றில்லி
திருவிலி[12] தீதிலி தேவர்க்கும் தேவன்
பொருவிலி[13] பூதப் படை யுடை யாளி
மருவிலி[14] வந்து என் மனம் புகுந்தானே (2941)

முகத்தில் கண் கொண்டு காண்கின்ற[15] மூடர்காள்
அகத்தில் கண் கொண்டு காண்பதே[16] ஆனந்தம்
மகட்கு தாய் தன் மணாளனோடு ஆடிய (2944)
சுகத்தைச்[17] சொல்என்றால் சொல்லுமாறு எங்ஙனே

அப்பினில் உப்புஎன அத்தன் அணைந்திட்டுச்
செப்பு பராபரம்[19] சேர் பரமும்[20] விட்டுக்[21]
அப்புறு சொற்பத மாளக் கலந்தமை
எப்படி அப்படி என்னும் அவ்வாறே (2945)

தானும்[22] அழிந்து தனமும் அழிந்து நீடு
ஊனும்[23] அழிந்து உயிரும்[24] அழிந்து உடன்
வானும்[25] அழிந்து மனமும் அழிந்து பின்
நானும்[27] அழிந்தமை நான் அறியேனே (2951)

தான் வரைவு[29] அற்றபின் யாரை வரைவது
தான் அவன் ஆனபின் யாரை நினைவது
காமனை[30] வென்ற கண் யாரை உகப்பது
தூமொழி வாசகம் சொல்லுமின் நீரே (2954)

மன மாயை மாயை இம் மாயை மயக்க[31]
மன மாயை தான் மாய மற்ற ஒன்றும் இல்லை[32]
பினை மாய்வதில்லை[33] பிதற்றவும் வேண்டாம்
தனை ஆய்ந்து இருப்பது தத்துவம் தானே (2956)

1 மக்கட்பிறப்பு 2 பெருங்கடல் முத்தித்துறை 3 மனம் 4 அந்தக்கரணத்தில் 5 அறியாமையாகிய இருட்டை வாங்கிக்கொண்டு முற்றுணர்வாகிய ஒளியை தந்தருள்வர் குரு 6 அஞ்ஞானம் கெட்டால் 7 பிரம்மம் 8 ஆருயிர் 9 பரம்பொருள் 10 அடையும் நெறியை 11கழுத்தில் பயனின்றித்தொங்கும் மடி 12 சென்றடையும் திருவில்லாதவன் 13ஒப்பில்லாதவன் 14 குற்றமற்றவன் தான் ஒன்றையும் சார்ந்திராதவன் 15 பொருளின் வடிவினை பார்க்கின்ற 16 பொருளின் முடியாப்பண்பினை பார்ப்பதே 17 உருவும் திருவும் பருவமும் குணமும் அறிவும் அன்பும் செறிவும் இன்பத்தைச் 18 பிரிக்கமுடியாதவாறு ஒன்றாய் கலந்து ஆருயிருடன் அனைந்து அருளி 19 பேருயிர் என்பதையும் 20 ஆருயிர் என்பதையும் 21 புணர்பால் கவர் பட்டுச்செல்லும் நிலை மாறி ஒன்றாகும் 22 உடம்புபற்றும் 23 மாமிசம் 24 உயிர்ப்பு வாயு 25 பஞ்சபூதமும் 27 நான எனது எனும் ஜீவபோதம் 29 பற்றுதல் 30 மாதர் போகத்தை 31சங்கற்பத்தை ஒழிக்க 32வேறுசாதனம் வேண்டாம் 33மாய்வதற்கு வேறொன்றும் இல்லை மாயை இல்பொருள் என்று கூறுவது அடாது.

சம்பூரண அகண்டாகாரமாய் வீடுபேறு வேண்டி தியானிக்க விருத்திகள் ஏழுசில :-

1 கூடஸ்தன் :- சாக்ஷி சத் சித் ஆனந்தம் நித்தியம் பூரணம் பிரஹ்மம்
2 பிரமாணம் :- தத் துவம் அஸி; அயமாத்மா பிரஹ்மம்; பிரஞ்ஞானம் பிரஹ்மம்
3 திரிசூர்பணம் :- பிரஹ்மமேது மாம்; மதுமேது மாம்; பிரஹ்மமேது மதுமேது மாம்
4 காயத்ரி :- தத்ஸவிதுர் வரேணியம் பர்கோ தேவஸ்ய தீமஹீ தியோயோந: ப்ரசோதயாத்
5 வேண்டுதல் :- யத்பத்ரம் தன்மஆசுவ = எது பத்திரமானதோ அந்த மோக்ஷத்தை எனக்கு அருளுக
6 சக்தி - இச்சாசக்தி கிரியாசக்தி ஞானசக்தி மறைப்புசக்தி மறக்கருணை அறக்கருணை பேரொளியறிவு
7 அவஸ்தைகள் :- [வியஷ்டி;சமஷ்டி;]-ஜாக்கிரதம் ஸ்வப்பனம் சுழுத்தி; ஷ்ருஷ்டி ஸதிதி சங்காரம்
8 அபிமானிகள் :- [வியஷ்டி; சமஷ்டி]-விசுவன் ஜீவன் கூடஸ்தன்; வைசுவாநரன் சூத்ராத்மா அந்தர்யாமி
9 சரீரங்கள் :- (வியஷ்டி;சமஷ்டி)-தூலம் சூக்ஷ்மம் காரணம்; விராட்டு இரண்யகர்பம் அவ்யாஹிருதம்
10 தேவர்கள் :- கணபதி, முருகன் சூரியன, சக்தி சிவன், விஷ்ணு கடவுள் (கடந்தும் உள்ளும் பரிணுமம்)
11 சூக்ஷ்ம ஆதாரங்கள் :- மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம விசுக்தி ஆஞ்ஞை, பிரஹ்மரந்திரம்
12 ஸ்வாஹா :- ஸ்தூலதேகம் இந்திரியங்கள் பிராணன்கள் அந்தக்கரணம் தந்மாத்திரைகள் கோசங்கள் சூன்யம்
13 தந்மாத்திரை :- கந்தம் ரஸம் ரூபம் ஸ்பர்சம் சப்தம் (நாதம் விந்து)
14 பூதங்கள் :- பூமி நீர் நெருப்பு காற்று ஆகாயம் (ஆவரணம் விக்ஷேபம்)
15 அந்தக்கரணம் :- அகங்சாரம் சித்தம் புத்தி மனம் உள்ளம் (கிரியை ஞானம்)
16 வாயுக்கள் :- அபானன் சமானன் வியானன் பிராணன் உதானன் (இச்சை குணம்)
17 ஞானேந்திரியம் :- மூக்கு, நாக்கு, கண், மெய், செவி (வேகம் காலம்)
18 கர்மேந்திபம் :- கருவாய் மலவாய் கால்கள் கைகள் வாக்குவாய் (தூரம் தேசம்)
19 தாதுக்கள் :- சர்மம் இரத்தம் சதை நரம்பு எலும்பு மஜ்ஜை மூளை
20 கோசங்கள் :- அன்னமயம் பிராணமயம் மனோமயம் விஞ்ஞானமயம் ஆனந்தமயம் பாழ்இருள் சிற்றறிவு
21 அவத்தைகள் :- அஞ்ஞானம் ஆவாணம் விட்சேபம் பரோட்சம் அபரோட்சம் சோகநார்ம் திருப்தியானந்தம்
22 ஞானபூமிகள் :- சுபேச்சை விசாரனை தநுமாநசி சத்துவாபத்தி அசம்சத்தி பதார்த்த அபாவனை துரியம்
23 ஜீவன்வழி :- தேவலோகம், ஆகாய அக்கினி, மழைநீர், தாவரங்களில், புருடவீரியம், கருக்குழி, பரலோகம்
24 அறிவுப்பரிணுமம் :- விருக்ஷாதி, இப்பிநத்தை, கறையான், எறும்பு புழுவண்டு, விலங்குபக்ஷிகள், மனிதர் ஞானி
25 விகாரங்கள் ;- ஆசை, சினம், கருமித்தனம், மயக்கம், வெறி, பொறாமை, டம்பம்
26 தர்மங்கள் :- அத்தியயனம் தானம் தவம் ஸத்தியம் பொறுமை தளராமை லோபமின்மை
27 ஞானசாதனம் :- ஸத்யம் தவம் புலனடக்கம் மனவடக்கம் தக்ஷிணை தர்மம் ஸந்தானவிருத்தி

உன் முகம்போற் கண்ணாடிக்குள் ளொரு முகங்கண்டாற்போல்
சின்மய வடிவின் சாயை சித்துபோற் புத்தி தோன்றும்
நின்மனோ விருத்தி யந்த நிழல் வழியாயு லாவும்
தன்ம நன்மகனே யித்தைத் தானன்றோ ஞான மென்பார் (11)

உருக்கிய தராநீர் நாநா வுருவங்க ளானாற் போல
விருத்திகள் கட்படாதி விடயமாய்ப் பரிணமிக்கும்
அருப்பல விடய மெல்லா மாபாசன் றேற்றுவிக்கும்
இருட்டினில் விளக்கும் கண்ணு மில்லாமற் பொருள்காணாதே (12)

கண்டறிந்தது ஞானங் கேட்டதுதனைக் கருதுபாவனை யோகம்
கண்டபேர் சொலக்கேட்டது மறந்துபோங் கண்டது மறவாதே
கண்டவஸ்து மெய் தியான வஸ்துக்கள் பொய் கருவியஞ்ஞானத்தைச்
கண்டவக்கணங் கொல்வது ஞானமே கநமமன் றறிவாயே (83)

சடமதாகிய தியான மெய்யாகிய சர்வமுந்தியை நல்கும்
திடமதான தெப்படியெனி லவரவர் தியானமே பிறப்பாகும்
உடலமாசையாற் றியானிக்கிற் றியானித்த வுடலங்களாகுவர் (85)
தொடர்பவங்கெட சொரூபமே தியானிக்கிற் சொரூபமாகுவர்மெய்யே

சத்தி சத்தனைத் தவிர வேறன்றுகாண் சத்சனு மாயாவி
வித்தை காட்டிய விந்திரசாலப்பொய் வித்துவான் மெய்போலப்
புத்தி மைந்தனே சத்திசானுகிய பூரண வான்மாவின் (98)
வத்து நிர்ணயஞ் சொன்ன திட்டாந்தத்தின் வழிகண்டு தெளிவாயே

சடமான மூடந்தருக்கல்லு மண்களிற் சத்தொன்றுமே தோன்றுமால்
விடமான காமாதி கோரத்தி லாநந்தம் விளையாது மற்றவைகளாம் (110)
திடமான வொழிவாதி சாந்தத்திலே சச்சிதானந்த மூன்றும் வெளியாம்
மடமான மூடங்கள் கோரங்கள் விடுசாந்த மனமாகி லாநந்தமே

போதத்தில் வருசுகம் விடயசுகம் நித்திரைப் போதுளது பிரமசுகமாம்
மோகத்த னந்தலிற் சுகம் வாசனைச்சுக முழுப்பிரிய மான்ம சுகமாம்
யோகத்தி லுளது முக்கிய சுகமு தாசீன முற்றசுக நிசசுகமதாம் (122)
ஏகத்தை நோக்க லத்துவிதசுகம் வாக்கிய மெழுந்தசுக ஞானசுகமே

இன்னவகை விதிவிலக்குக் குணங்க ணன்றுய்ச் சேர்ந்தொருமித்
தெல்லாங்கூடி/சொன்னபொரு ளொன்றன்றி யிரண்டில்லை யொரு
பொருளைச் செல்லுஞ்சொற்கள்/பின்னபதமா மதனாற் சத்தாதி குணப்
பொருளாம் பிரமமேகம்/அன்னபொரு ளொருமையறிந்தகண்ட
பரிபூரணமா யாவாய் நீயே/ (138)

துற்சங்க நிவர்த்தி வந்து பரஞானம் விரும்புவது சுபேச்சை யாகும்
நற்சங்க மொழிவினவி ஞான நூல் பழகல் விசாரணையா நம்பி
முற்சங்க வேடணைகள் விடற்தநுமானசி யிந்த மூன்றி னாலும்
சற்சங்க மனதி லுண்மை யறிவுதித்தல் சத்துவாபத்தி தானே [150]

தத்துவத்தின் மனமுறைத்து மித்தையெலா மறத்தல் அசம்சத்தியாகும்
அத்துவிதாநந்தம் வருந் திரிபுடிபோம் பதார்த்தஅபாவனைய தாகும்
வத்துநிலை யிருந்தபடி யிருந்தமவுன சுபாவந் துரிய மாகும் [151]
இத்துரிய பூமியைமுன் துரியாதீதப் பதமென்றதுவுங் கேளாய்

மனத்தினா லெண்ணித் தானே வந்ததிவ் வுலக மாகும்
நினைத்திடி லநேக லோக நிற்பதவ் வறிவி லன்றோ
அனைத்தையுங் கடந்தப் பாலு மந்தமற் றறிவி தாமென்
றெனைத்தனி விசாரித் திட்டா லேகமாய் நிறைந்தோ னானே
[167]

வாதனை வசத்தி னாலே வருகிற விருத்தி யெல்லாம்
ஏதினா லடக்கலாகு மென்றுதான் விசாரஞ் செய்யில்
போதமா மிராசன் றனைப்ப் புந்தி யைம் புலன்க லெல்லாம்
தாதரா யிருக்கப் பெற்றாற் சகலமு மடங்குந் தானே (169)

விருத்திக ளடக்க வின்னும் விநோதமாம் யோகத் தாலே
துருத்திபோ லூது மூச்சைச் சுகமுடன டக்கி னிற்கும்
கருத்ததற் கில்லை யென்னிற் காரண சரீர மாகிப்
பெருந்ததோ ரவித்தை தன்னைப் பிடுங்கிடி லடங்குந் தானே [170]

காரண சரீரந் தன்னைக் களைவதெவ் வாறென் றோதில்
ஆரணம் பொய்சொல் லாதே யதன்பொரு ளகத்தி லுய்த்துப்
பூரண மாகு மென்மேற் புவனங்க டொற்ற மென்று
தாரணை வந்த தாகிற் றரித்திடு மவித்தை யெங்கே [171]

சித்துநா னிறைந்தோ னென்ற திடமற வாதி ருந்தால்
எத்தனை யெண்ணி னாலு மேது செய் தாலு மென்ன
நித்திரை யுணர்ந்த பின்பு நிற்கின்ற கனாவே போல
அத்தனை யும்பொய் தானே யாநந்த வடிவு நானே [173]

நானென உடலைத்தானே நம்பினே னநேக சன்மம்
ஈனராய்ப் பெரியோ ராகி யிருந்தவை யெலாமிப் போது
கானலில் வெள்ளம் போலக் கண்டுசற் குருவி னாலே
நானென வென்னைத்தானே நம்பியீ டேறி னேனே [174]

(சாட்சியை - ஜீவனின் ஆபாசனையும் சேதனத்தையும் பகுத்தறியுமறிவை)